# ஆறிப்போன காயங்களின் வலிகள்



கவிஞர் முல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறிப்போன காயங்களின் வலிகள்

கவிஞர் முல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-624-5786-07-7

# ஆறிப்போன காயங்களின் வலிகள்

(கவிதைத் தொகுப்பு)

கவிஞர் முல்லை

முருகையா சதீஸ்
பதிப்புரிமை : © முருகையா சதீஸ்
முதற்பதிப்பு : 2021 ஒக்டோபர் 07
நூல்வடிவம் : கரிக்கண்ணன், யாழ்ப்பாணம்
பக்கங்கள் : xvi + 107
விலை : ரூ. 590.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும்
முகம் கொடுத்து
தினம் தினம் மரணத்துள் வாழ்ந்து
மடிந்துபோன
என் தேசமக்களுக்கு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை...

முருகையா சதீஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக்கலை பயின்ற மாணவன். கவிஞர் முல்லை என்ற புனைபெயரில் பல்வேறு ஊடகங்களிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. இத்தொகுப்பில் நாற்பத்தெட்டுத் தலைப்புகளில் இவர் தனது மன உணர்வுகளுக்கு வார்த்தைகளில் வடிவம் கொடுத்துள்ளார். இவை கவிதைகளாகவும் வாசிக்கப்படலாம், மன அவலங்களை வெளிப்படுத்தும் வார்த்தைகளாகவும் பார்க்கப்படலாம். மரபு சார்ந்த தமிழ்க் கவிதைகளில் பற்றுக்கொண்ட வாசகனுக்கு இவற்றைக் கவிதைகளாக வாசிக்க முற்படும்போது ஏற்கனவே எழுதிவைக்கப்பட்ட கவிதைக்கான இலக்கண வரம்புகள் அடிக்கடி ஆர்வத்தைத் தடுக்கலாம். மறுபுறத்தில் காரிகை கற்றுத்தான் கவி பாட வேண்டும் என்ற கருத்து நிலை காலங்கடந்த உபதேசமாகி விட்டதே என்ற குரலைக் கேட்கும்போது சற்று நிதானித்து இவ்வார்த்தைகள் வாக்கியங்கள்தானா? அல்லது வாக்கியங்கள் என்ற நிலையைக் கடந்த உருவங்களா என்ற வினாவை முன்வைத்து இவற்றை ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுவிடுகின்றது. இதற்கான விடையிலேயே இவை கவவிதைகள்தானா? அல்லது வார்த்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியல்கள்தானா என்ற முடிவை ஒவ்வொரு வாசகனும் தெரிந்து கொள்கிறான். இந்த முடிவிலேயே படைப்பின் வெற்றியும் நிர்ணயிக்கப்படுகின்றது.

முருகையா சதீஸ் கிழக்கிலங்கையிலிருந்து யுத்த சூழலின் மத்தியில் இடம்பெயர்ந்து வட இலங்கைக்கு வந்தவர். இடப்பெயர்வு கிராமத்து வாழ்வின் அடித்தளத்தையே சிதைத்து விட்டதால் அந்த வாழ்வின் மீதான ஏக்கம் அவரது வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. சான்றாக, 'நினைவுகள்' என்ற தலைப்பில் இழந்து போனவற்றிற்கான ஏக்கங்களையே அவர் வெளிப்படுத்துகின்றார்.

*"கிடுகு வேய்ந்த
கிராமத்துக் குடிசைகள்!
பச்சை வண்ணக்கிளிபோல்
பசுமையான வயல்வெளிகள்!
திக்குத் திசை சிதறி
அங்குமிங்குமாய்த் தெரியும்
மாமரச் சோலைகள்!*

*அந்தி வானத்து
மாலைப் பொழுதுகள்!
ஊர்கூடி மகிழும்
ஆலமரத்து நிழல்!
விறகுச் சுமையுடன்
அன்ன நடைபோடும்
பெண்கள்!*

*கிளித்தட்டுப் பம்பரம் பாண்டி
பல்லாங்குழி ஆடும்
சிறுவர்கள்!
நிலாச் சோறுண்ட
முற்றத்து நினைவுகள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரு கண்ணு பட்டிச்சோ
அத்தனையும் இன்றில்லை!
......"

இவை அவரின் மன ஏக்கத்தின் வெளிப்பாடு. உலகை உலுக்கி வருகின்ற கொரோனா என்னும் கொடிய நோயின் தாக்கத்தால் இங்கும் ஊரடங்கு விதிக்கப்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு நேர்ந்ததால் ஏழைகளின் வீட்டில் பஞ்சமும் பசியும் வாட்டி வருத்தியதைக் 'கொரோனா' என்ற தலைப்பில்,

"ஊரடங்கு போட்டதிலே - இங்கு
அடுப்பில் உலை ஏறவில்லை!
.......
பொறிகலங்கித் தவிக்கிறோம்

கொரோனாவே போய்விடு" என்று உருக்கமாகக் கேட்கிறார். கிராமத்து வாழ்வில் கூட்டுக்குடும்பங்களாய் குதூகலித்து வாழ்ந்தவர்கள், புலம்பெயர்ந்து பணத்திற்காய் மட்டும் வாழ நேர்ந்த பரிதாப வாழ்வில் வாழ்வை இழந்தவர்கள் முதுமையடைந்த பெற்றோர்களே.

"வந்தது முதுமை
ஆற்றுப் படுக்கையின்
வரண்ட பகுதியைப்போல்
முதுமை வரைந்த கோடுகள்
என் முகத்திலே தெரிகின்றன!

தலைமுடி நரைத்து
உடல் தசை சுருங்கி
அழகினை இழந்து
பொலிவது சிதைந்து
ஊன்று கோலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தே நிற்கிறேன்!
பத்து மழலைகள்
பெத்தென்ன இலாபம்?
பத்திரமாய்ப் பார்த்திட
ஆளில்லா வலிகளோடு
வெடித்துப்போன பாதங்கள்
முதிர்ந்துபோன உடலைச்
சுமந்து எங்கோ செல்கின்றதே!

முதுமை என்ற தலைப்பில் வருகின்ற மேற்படி வரிகள் வயதான காலத்தில் பிள்ளைகளால் கவனிக்கப்படாமல் அவலப்படுகின்ற பெற்றோர்களின் நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

ஆங்கில ஆட்சிக்காலத்தில் வளமான வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இலங்கைக்கு வந்த மலையக மக்கள் இன்னும் தோட்ட லயங்களில் வாழ்வை இழந்து தவிக்கும் பரிதாப நிலையையும் இவரது வார்த்தைகள் எடுத்துக்காட்டுகின்றன. 'மலையகத்து வாழ்வு' என்ற தலைப்பில்,

"பல நூறு வருடங்களாய்
ஏன் உங்கள்
லயம் மட்டும்
அப்படியே கிடக்கின்றது?
......

அட்டை குடித்த
இரத்தத்தின் மிச்சத்தை
முதலாளி வர்க்கம்
உறிஞ்சியே குடிக்கின்றது!
மத்திய மலைநாட்டின்
முதுகெலும்புகளாய்
நாட்டை நிமிர்த்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தியாகிகள் நீங்கள்!*
*நாட்டையே ஒளியேற்றி*
*உம்மையே உருக்கிய*

*மறவர்கள் நீங்கள்"* என்று மலையக மக்களின் துன்பத்தையும் எமது நாட்டிற்காக அவர்கள் செய்து வருகின்ற தியாகத்தையும் எடுத்துக்காட்டுகின்றார். பாரதிதாசனின் வார்த்தைகளில் சொன்னால் இவர்கள் சித்திரச் சோலைகளில் ரத்தம் சொரிந்தவர்கள். அவர்களின் இரத்தமே முதலாளி வர்க்கத்தின் போதை தரும் பானமாகியிருக்கின்றது என்பதை இவரின் வார்த்தைகளிலும் காண முடிகின்றது. பொதுவாக இழந்தவற்றை நினைத்து ஏங்குவதும் சமுதாயக் கொடுமைகளைக் காணப் பொறுக்காது பொங்கி எழுவதும் இக்காலக் கவிஞர்களின் பொதுவான பண்புகள். இந்த எல்லைகளுக்குள் நின்று தனது மன உணர்வுகளுக்கு முருகையா சதீஸ் வார்த்தைகளில் வடிவம் கொடுத்துள்ளார். மணற்கேணி தொட்டனைத் தூறுவது. கவிதையும் அவ்வாறானதுதான். மீண்டும் மீண்டும் எழுதப்பட வேண்டும். என்றோ ஒருநாள் உன்னதமான படைப்பு உருவாகியே தீரும். அந்த எல்லையைத் தொடுவதற்கு இது ஒரு ஆரம்ப முயற்சியாகவே அமையட்டும். எதிர்காலம் உன்னதமாக அமைய உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

பேராசிரியர். கலாநிதி. ம. இரகுநாதன்,
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
*14.08.2021.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை...

கவிஞர் முல்லை பாடிய கவிதைகளைக் கொண்டதாக ஆறிப்போன காயங்களின் வலிகள் என்னும் கவிதைத் தொகுதியினைப் படித்தபோது நல்ல சுவையான பல கவிதைகளைப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. உள்ளத்தில் உண்மை உணர்வும் பட்டறிவும் இணைந்து செறிவுறுகின்றபோது துடிப்புள்ள கவிதைகள் பிறக்கும் என்பதில் ஐயமில்லை. கவிஞர் முல்லையின் கவிதைகள் அப்படிப்பட்டனவாக உள்ளன. அரசியல். சமூக, பண்பாட்டுப் பின்னணி அவர் கவிதைகளின் பொருண்மையைத்தீர்மானிக்கின்றன. பழையநினைவுகள், விட்டுப்போன பண்பாட்டுக் கூறுகளின்று விடுபடா எண்ணங்கள் அவர் கவிதைகளை வடிவமைக்கின்றன. இயல்பான எளிமையான எண்ணங்களே கவிதைகளை ஊடறுத்துச் செல்கின்றன. இதனால் படிக்கும்போது வாசகர் மனங்களை இயல்பாக ஒன்றவைத்துவிடும் என நம்புகிறேன். வட்டுவாகல் பாலத்தின்,

"இக்கரையில் இருந்து
அக்கரையைப் பார்க்கையில்
கோயில் கோபுரத்தில்
கண்கள் உட்காரும்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கவிஞர் பாடும்போது மிக எளிமையாக அமைகிறது. ஆனால் "கண்கள் உட்காரும்" என்னும் காட்சிப்படுத்தலில் எத்தனை உணர்வுகள் இழையோடுகின்றன.

நடந்தபோரும், சுனாமியும்கோரோனாவும்கவிஞரின் பாடுபொருள்களாக அமைந்தன என்பது வியப்பில்லை. சுனாமியைக் "கொலைகாரப் பாதகத்தி"யாகவே கவிஞர் பார்க்கிறார்.

"யேசுபாலன் பிறக்கையிலே
எமைஇறக்கவழி செய்துவிட்டாய்
உன்அலை காணும் நேரங்களில்
எம்உடல் காணச் செய்துவிட்டாய்
ஊழிக்கூத்து நீயாடி
கொலைசெய்த பாதகத்தி"

என்று அந்த ஊழிக்கூத்து நடந்த காலத்தையும் அதன் விளைவுகளையும் தன் சொற்களாலே சித்திரிக்கிறார். இயற்கை வாழ்வினையும் இயல்பு வாழ்வினையும் மறந்த மனிதர்க்கு இது ஒரு தண்டனை எனப் பலரும் பேசிக்கொள்வதை கொரோனா பற்றி,

"ஆட்டம் போட்ட மனிதனை நீ
வீட்டிலே முடக்கிவிட்டு
இயற்கையை மட்டும் நீ
இன்பமாக்கிவிட்டாய்!"

என்று கவிஞர் சொற்படத்தில் காட்டுகிறார்.

"தொடர்ச்சி", "எம் குருந்தூர் மலை", "பரம்பரைக் காணி", "வேதனை" போன்ற கவிதைகள் இன்றைய நம்நாட்டுப் போக்குகளைக் கண்டு மனம் நொந்து பாடுவனவாக அமைந்துள்ளன. வயதுக்கேற்ற காதல் பாடல்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணகித் தாய்" எனக்கு மிகவும் விருப்பமான கவிதையாக அமைகிறது. "குருந்தூர் மலை" பற்றிப் பாடிய கவிஞருக்கு நம் குலம் காக்கும் கண்ணகித் தாயின் இருப்பிடம் நினைவு வருகிறது. அடுத்ததாக "கண்ணகித் தாய்" கவிதை இடம்பெறுகிறது. "நந்திக் கடலோரம் கண்ணகிமுகம் தெரியும்" என்று தொடங்கும் பாடல் வற்றாப்பளை அம்பாளின் பக்தியும் கலையும் பரபரப்பாகக் கலந்து வரும் திருவிழாக் கோலத்தைக் காட்டுகின்றது. மட்டக்களப்பில் 'கண்ணகி வழக்குரை' ஆகவும் வன்னியிலே 'சிலம்பு கூறல்' ஆகவும் யாழ்ப்பாணத்தில் 'கோவலனார் கதை' ஆகவும் பிற இடங்களிலே 'பத்தினி தெய்யோ' ஆகவும் விளங்கும் அந்தத் தாயிடம் "எம் வாழ்க்கைக்கு ஒளிவீசி அருள்புரிவாயே" என்று கவிஞர் வேண்டுகிறார்.

நிறைவாக, கவிஞர் முல்லை எளிமையான, இனிமையான தமிழ் நடையில், உணர்வுக்கும் எண்ணத்துக்கும் விருந்தளிக்கும் பொருண்மையினைப் பாடியுள்ளார். அவருடைய சமூக, அரசியல், இயற்கை பற்றிய கண்காணிப்புகள் நேர்த்தியாக உள்ளன. அவை நாம் காணாதவை அல்ல. ஆனால் நாம் கண்டவற்றை எளிமையான இயல்பான கவர்ச்சியான தமிழ் நடையிலே தந்துள்ளார். அவருக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் கூறி என்னுடைய இந்த அணிந்துரையை நிறைவுசெய்கிறேன்.

தகைசால் பேராசிரியர் அ. சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
***06.10.2021.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை...

"ஆறிப்போன காயங்களின் வலிகள்" எனும் இக்கவிதைத் தொகுப்பு என் நீண்ட நாள் உழைப்பு. பள்ளிக்காலங்களில் இருந்தே பல்வேறு போட்டிகளுக்காகவும், மேடை நிகழ்வுகளுக்காகவும், இதழ்களுக்காகவும் கவிதைகள் எழுதி வருகிறேன். சமகாலப் பிரச்சினைகளின் எதிரொலிகளைக் காட்டுவனவாகவே பெரிதும் அவை அமைந்துள்ளன. சமூகத்தை விட்டுப் பிரிந்துநின்று எந்தவொரு படைப்பையும் நாம் படைத்துவிட முடியாது. என்னுடைய கவிதைப் படைப்புக்களும் அத்தகையதே. உணர்வுகள் கொதிநிலை அடைந்து சொற்கள் சினைப்பட்டே கவிதைகள் பிறக்கின்றன. என் உணர்வுகளின் கொதிநிலையை இப்படைப்பின் மூலம் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடைபோட்டுக் கொள்ளலாம். நான் போர்திண்ட மண்ணில் இருந்து மீண்டவன். சொல்லிலடங்கா வலிகளையும், வேதனைகளையும் அனுபவித்தவன். இதனால் நான் எழுதவேண்டிய கதைகளும், கவிதைகளும் நிறையவே இருக்கின்றன. இப்படைப்பே என் பயணத்திற்கு அத்திவாரமாய் அமையட்டும்.

இக்கவிதைத் தொகுப்பு உதயமாவதற்குத் தூண்டுகோலாக இருந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், இந்நூலிற்கு ஆசியுரை வழங்கிய எனது மதிப்பிற்குரிய குருநாதர் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் ஐயா அவர்களுக்கும், இந்நூலிற்கு அணிந்துரை வழங்கிய மதிப்பிற்குரிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஐயா அவர்களுக்கும், தந்தையைப்போல் எப்போதும் அக்கறையுடன் ஆலோசனைகளைச் சொல்லியும், இந்நூலிற்கு மதிப்புரை வழங்கியும் உதவிய மதிப்பிற்குரிய பண்டிதர், கலாநிதி செ.திருநாவுக்கரசு ஐயா அவர்களுக்கும், இந்நூலினைக் கரிசனையோடு சிறந்த முறையில் வடிவமைத்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

கவிஞர் முல்லை
மாணவன்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*07.10.2021.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

நினைவுகள்...! 01
அன்புள்ள அம்மாவுக்கு...! 03
புதுவாழ்வுதான் மலருமா...? 05
கல்விக்கு ஒளிதந்தவர்கள்...! 07
தோழமை...! 09
தமிழ்த்தாயே வாழ்க நீ...! 11
பல்கலைவாசல்...! 13
காத்திருப்பு...! 15
வாழ்கநம் நாடு...! 17
தொடர்ச்சி...! 19
வயற்காடு...! 21
ஏழ்மையின் குரல்...! 23
ஆறிப்போன காயங்களின் வலிகள்...! 25
எம் குருந்தூர் மலை...! 29
கண்ணகித் தாய்...! 31
கொரோனா...! 33
விவசாயி...! 35
முதுமை...! 37
பிரிவு...! 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகாரப் பாதகத்தி...! 41
வரட்சி...! 43
அன்புள்ள நண்பா...! 45
வெள்ளைக் கட்டடங்கள்...! 47
அப்பா...! 49
காற்றே...! 51
வான் மழையே...! 53
பரம்பரைக் காணி...! 55
வேதனை...! 57
தந்தையின் தாலாட்டு...! 59
பழஞ்சோற்றுச் சாதம்...! 61
மீட்டல்...! 63
நாளை...! 65
இடப்பெயர்வு...! 67
அந்தநாள்...! 69
மண்ணிற்குப் போகிறேன்...! 71
மகாத்மா...! 73
வார்த்தைகளில்தான் வசந்தம்...! 75
வட்டுவாகல் பாலம்...! 77
உன்னைத் தேடும் மனது...! 79
மலையகத்து வாழ்வு...! 81
ரணங்கள்...! 83
அரவமற்ற தேசம்...! 85
என் அவள்...! 87
சிங்களத் தோழனுக்கு...! 89
நிம்மதி கிடைக்குமா...? 91
காலைப்பொழுது...! 93
புதிய அத்தியாயம்...! 95
காதல் விதை...! 97
மதிப்புரை...! 101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்...!

“

கிடுகு வேய்ந்த
கிராமத்துக் குடிசைகள்!
பச்சைவண்ணக் கிளிபோல்
பசுமையான வயல்வெளிகள்!
திக்குத்திசை சிதறி
அங்குமிங்குமாய்த் தெரியும்
மாமரச் சோலைகள்!

அந்திவானத்து
மாலைப் பொழுதுகள்!
ஊர் கூடி மகிழும்
ஆல மரத்துநிழல்!
விறகுச் சுமையுடன்
அன்னநடைபோடும்
பெண்கள்!


கிளித்தட்டுப் பம்பரம் பாண்டி
பல்லாங்குழிஆடும்
சிறுவர்கள்!
நிலாச் சோறுண்ட
முற்றத்து நினைவுகள்!
யாரு கண்ணுபட்டிச்சோ
அத்தனையும் இன்றில்லை!
எங்குதேடினும்
கிடைக்காத ஆனந்தம்
வெறும் நினைவுகளாய்
படிந்துபோகிறது...!

○

(நீங்களும் எழுதலாம், வைகாசி, 2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அம்மாவுக்கு...!

"

தவம் இருந்து பெத்தவளே
என்னைச் சொத்தாகநினைத்தவளே!
கோயில் குளம் போனாலும் - என்
குலசாமியாய் நிற்பவளே!
'அம்மா'னு அழைத்தாலும்
அகிலமெல்லாம் உன் முகம்தான்
தொலைதூரம் இருந்தாலும் - என்
உள்ளமெல்லாம் நீதானம்மா...!

பள்ளிக்கூடம் போகையிலே
பின்னாடி வந்துநிற்பாய்!
பசிக்குதென்று சொன்னாலும்
பதறுமம்மா உன் தேகமெல்லாம்!
கழுத்தில நகையுமில்ல - உன்
கையில கடகமில்ல
படிப்புத்தான் வேணுமென்று
ஊரு புள்ளாக் கடனவைச்சாய்...!

பத்துத் திங்கள் சுமந்தவளே ... என்னைப்
பக்குவமாய் வளர்த்தவளே!
உன் உதிரம் நான் உறிஞ்ச
வேதனையைப் பொறுத்தவளே!
சுட்டித்தனம் செஞ்சாலும் - நீ
கோபம் கொள்ளமாட்டாயம்மா!
கருணையின் இருப்பிடமே - என்
கண்கண்டதெய்வம் நீதான்...!

உன்னை நீ ரணமாக்கி
என்னை நீ படைத்துவிட்டாய்!
உள் மனதில் ஊஞ்சல் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைநான் சுமக்கிறேனே!
கவலைகள் எனக்கிருந்தால்
கண்ணீர் தினம் உனக்குவரும்!
கல்லூரி நான் படிக்க
கரும்புகையில் வெந்தனையோ?

பேரழகன் நானுமில்லை
பேரறிவும் எனக்கு இல்லை!
கண்ணூறு படுமென்று
உச்சிவரைசுற்றிடுவாய்!
என் முகத்தைச் சலிக்காமல்
கொஞ்சிக் கொஞ்சிமகிழ்திடுவாய்!
உன்மடியில் நான் சாய்ந்தால்
உலகமே மறந்து போவாய்...!

எத்தனையோஉறவிருக்கு
உன்னைப் போல உறவு இல்லை!
எத்தனையோ சொந்தமுண்டு
உன்னளவிற்கு ஈடு இல்லை!
நான் சாகும் வரையிலும்
என் சுவாசம் நீதானே!
இனி ஜென்மம் என்றாலும்
என் மகளாய் நீவேண்டும்...!

தாயாக நீ மாறி
தினம் என்னைக் காத்தவளே!
சேயாக நீ மாற – நான்
உன்னைக் காக்கவேண்டும்!
உன் வயிற்றைக் காயவைத்து
என் வயிற்றை நனைத்தவளே!
நீ இல்லா உலகத்தில்
நான் வாழமாட்டேனே...!

○

(5.3.2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வுதான் மலருமா...?

"


ஏழைத்தாய் பெற்றெடுத்த
முதற்பிள்ளை - இங்கு
தெருவிலே நிற்குதம்மா!
வயது நான்கிருக்கும்
பழஞ்சோற்றைப் பிசைந்து
மழலைமொழி பேசுதையோ!
பாவம் அவள் நிலை
இனிவரும் யுகத்திலாவது
வசந்தம் வருமா?
புன்னகை பூக்குமா?
புதுவாழ்வுதான் மலருமா?

○

*(6.2.2016)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கு ஒளிதந்தவர்கள்...!

"

நாம் முதல் வகுப்பில்
கால் பதித்தபோது - எம்
பிஞ்சுவிரல் பிடித்து
கலைகள் அனைத்தையும்
போதித்தவர்களே!
அன்று எம் பள்ளியில்
தாயாய்! தந்தையாய்!
குருவாய்! தெய்வமாய்!
உலாவந்தீர்கள்...!
கனிவோடு வருவோர்க்கு வழிகாட்டி
கங்குகரையில்லாஆற்றல் ஊட்டி
காலமெல்லாம் மறவாதே - எனக்
கரம் கூப்ப வைத்தவர்களே!
கல்வி, ஒழுக்கம், தூய்மையென
நேர்சீராய்க் கற்கவைத்து
வித்தைகள் பலசொல்லி
வித்தகராய் வளர்த்துவிட்டீர்
விண்ணளவு நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்காய்ச் சொரிகின்றோம்...!
ஆசிரிய தினமதில்
முகம் நிறைக்கும் மாலைகளாய்க்
காணும் காட்சிகள்
இன்றும் நினைவில்
நிழலாடுகின்றன...!
எம் வாழ்வில்
ஒளியேற்றிய தீபங்களே!
எம்மை நினைவிருக்கிறதா?
வீட்டுப்பாடம் செய்யாததால் - நாம்
வாங்கிய தண்டனைகள்
சொல்லிலடங்காது...!
விழிகளை மூடினாலும் - எம்
கனவிலே நீங்கள்தான்
இந்தக் கனவுகள் தொடர
இரவுகள் நீளாதோ...?
மறுஜென்மம் இருந்தாலும்
உம்மிடமே கல்விகற்போம்
காலத்தால் அழியாத
நாயகர்கள் நீங்கள்! - எம்
வாழ்வைச் செதுக்கிய
சிற்பிகள் நீங்கள்!
கல்விக்கு ஒளிதந்த
விடிவெள்ளிகள் நீங்கள்!
ஊரும் நினைவாட
பாரும் உமைப்பாட
ஆல்போல் வேரும் விழுதுமாய்
எம் உள்ளத்தில்
காலமுள்ளவரை வாழ்வீர்கள்!
இது உறுதி...!

o

*(15.3.2014)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமை...!

"

பனியோடு பனியாய்
தன் பணிமறந்து
உறைந்துபோய் நிற்கும்
இறந்தகாலமே!
நிலவாய் நீலவானமாய்- நம்
நட்பெனும் பாலத்தில்
தொலைவானமும் தொடும்தூரம்தான்!

நண்பர்கள் உடனிருந்தால்
தடைக்கல்லும் படிக்கல்லாகும்
நாளையே விடியலாகும்
முள்ளும் மலராகும்
வான்மேகம் மழைதூவும்!

காலம் எமக்காய்
கட்டிய கோட்டையில்
நண்பர்களாய்ப் பயணிக்கிறோம்!
ஆண்டுகள் பலசென்று
அடங்கிப் போனாலும்
பீனிக்ஸ் பறவைபோல்
உயரப்பறக்கும் தோழமையாய்- நாம்
காற்றிலே கைவீசிச்செல்வோமே...!

○

*(8.10.2019)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தாய்

# தமிழ்த்தாயே வாழ்க நீ...!

"

தென்பொதிகையில் பிறந்தமொழி
தென்பாண்டி வளர்த்தமொழி
தேனினும் இனியபைந்தமிழ்மொழி
தெவிட்டாத செந்தமிழ்மொழி

அமுதிலும் இனியமொழி
ஆண்டாண்டுகாலம் வாழும்மொழி
அன்னைமடியை மிஞ்சும்மொழி
என்னைத்தாலாட்டிய எனதருமைத் தாய்மொழி

என்னைநான் தொலைத்தபோது
எண்ணமெல்லாம் நிறைந்தமொழி
முகவரி இழக்காத இலக்கிய உலகிலே
முத்தாக மிளிரும் மொழி

கம்பனின் நாவில் தவழ்ந்தமொழி
என்றென்றும் கவிபாடிக் களித்தமொழி
ஈரேழுஉலகம் அழிந்தாலும்
ஈன்றெடுத்ததாயகம் அழிந்தாலும்
பெரும்பொழுதில் கற்றதை மறந்தாலும்
வானுயர் கொண்டஉன்புகழ் மறையாது.
தமிழ்த்தாயே வாழ்க நீ!
பல்லாண்டுகாலம் உன் புகழ் வாழவே!

o

*(தமிழமுது, இதழ் 01, 2018,*
*தமிழ்த்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைவாசல்...!

"

திரும்பிப் பார்க்கிறேன்
என் பல்கலைவாசலை
தொலைதூரப் பார்வைக்குள்
தொலையாமல் நிற்கிறது!
கண்சிமிட்டும் நேரத்திலும்
கலையாமல் தெரிகிறது!

அந்தக் கனிவான நாட்கள்
என்றும் மறப்பதில்லை- எமக்கு
என்றும் மறப்பதில்லை!
பிரச்சினைகளில் கைகலப்பதும்- பின்
ஒன்றாய்ச் சேர்ந்து கட்டியணைப்பதும்
எமக்கொன்றும் புதிதல்ல!

காகிதத்தால் ராக்கெட் விடுவதும்
கடலைபோட்டுக் காலம் கடப்பதும்
கடைசிநேரம் தூக்கம் விழிப்பதும்
பல்கலைதந்த பொக்கிச நினைவுகள்!
பட்டப் பெயர் பலவும்
சொல்லிஅழைத்தோம்!
நண்பர்கள் முதல்
விரிவுரையாளர்கள் வரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரட்டைகள் அடித்து
பட்டாசாய்ச் சிரித்த
பகிடிவதை நேரங்களும்!
இளமைத் தென்றலின்
இதயத்துடிப்பான
சுற்றுலாப் பயணங்களும்
எத்தனை! எத்தனை!

வசந்தகால நினைவுகள்
வந்து எம்மைவாட்ட!
கலைந்துபோன கனவுகள்!
கணமும் மறவாக் கவலைகள்!
ஏற்கமுடியா இழப்புக்கள்!
ஆற்றமுடியா சோகங்கள்!
பிரிவைப் பரிசளிக்கப்
பார்த்திருக்கிறது காலம்!

மீண்டும் வருவோம்
பழைய மாணவர்களாய்!
திறந்து வையுங்கள்- எம்
பல்கலை வாசலை!
கண்ணீருக்குக் கூட
உயிருள்ளது என உணர்கிறேன்!
கடந்துபோகும் பல்கலை நினைவுகள்
என்னுள் சங்கமிக்கும் போது!
ஐயகோ! ஐயகோ!
பாவம் யாம்! பாவம் யாம்!
இவையாவும்
வலியின் ரணங்கள்!
கண்கள் உதிர்த்தன
கண்ணீர்த் திவலைகள்...!

o

(கவிதைப்போட்டி, கலைவாரம், 2018,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பு...!

“

நீ பொங்கும் அலையில்
பொழியும் அருவியடி!
புன்னகை பூத்திடும்
புதுமை அழகியடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடிய விழிகளைத்
திறக்கச் செய்தவளே
மௌனம் காப்பதையாரிடம்
நீ கற்றுக் கொண்டாய்...!

காணும் திசையெல்லாம்
உன் உருவம்!
செல்லும் திசையெல்லாம்
உன் பாதச்சுவடுகள்!
கனவிலும் கூட
என்னைச் சிறைபிடிக்கின்றாய்...!

கன்னியாய்க் கிணறுகள்
வெந்நீரைத் தருகையில்- நீ
என் இதயத்தில்
காதலை மீட்டுகின்றாய்!
என்னவளே- என்
தவிப்புக்களை இரசித்தபடி- நீ
மௌனம் கொள்வதில்
என்னடிநியாயம்...?

மௌனத்தைக் கலைத்துவிடு
இந்தத் தலைவன்தான்- உன்
மணவாளன் என்று
வார்த்தையொன்று சொல்லிப்
போகாயோ...?
உனக்காகக் காத்திருப்பேன்
காலமெல்லாம் மட்டுமல்ல
மரணத்தைக் கடந்தும்
மறு ஜென்மத்திலும் கூட
ஒருமுறையா! இருமுறையா!
ஓராயிரம் தடவைகள்...!

o

*(9.2.2014)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்கநம் நாடு...!

"

எம் பாட்டனும் பாட்டியும்
மகிழ்ந்து குலாவி
இருந்தது இந்நாடே!
பொங்குதமிழர் ஆயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து முடித்ததும் இந்நாடே...!

மாவீரன் ஆயிரம் எண்ணம்
வளர்த்து உயர்ந்ததும் இந்நாடே!
வீரர்கள் எழுந்துவிடுதலை கூறி
பாய்ந்ததும் இந்நாடே!
தமிழ்த் தலைவன் வழியில்
வீரம் வளர்த்து- முன்
நின்றதும் இந்நாடே...!

நாம் சிறுவர்களாக ஓடியாடிக்
களித்ததும் இந்நாடே!
வித்துடல்பலவும் விடுதலைக்காய்
வித்தாகிப் போனதும் இந்நாடே!
மங்கையர் பலரும்
இரும்புக் கரத்தோடு
வளர்ந்தது இந்நாடே...!

தமிழர் சேனையின்
விமானம் உயர்ந்து
காற்றாகிப் போனதும் இந்நாடே!
வீரர்கள் மாய்ந்து
அவருடல் விதைந்து
வித்தாகிப் போனதும் இந்நாடே!
எம் சந்ததி வளர்ந்து
ஆனந்தக் கூத்தாட வாழ்கநம் நாடே...!

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சி...!

"

யன்னலோரக் காற்றுவாங்கி
பேரூந்தில் பயணிக்கிறேன்!
தொலைவில் தெரியும்
இயற்கைக் காட்சிகள்
கண்களுக்கு இரையாகின்றன!
பின்னிருக்கையில் யாரோ
பேரூந்தில் ஒலிக்கும்
காதல் கீதங்களிற்கு
அரவம் போடுகிறான்!

திடீர் என்று
ஓர் அசைவுடன்
பஸ் நிற்கிறது!
'எண்ட எண்ட'
கொரோனாக் காலத்திலும்
இதுவும் ஒரு கொடுமைதான்!

வெறிச்சோடிய வீதியில்
சோதனைச் சாவடி!
ஒற்றையடித் தடமென
பொதிசுமந்து செல்கிறோம்!
நேற்றைப் போல்
இன்றும்!
தட்டுத் தடுமாறிப்
போகும் அவலங்கள்!
எத்தனை காலம்தான்
தொடருமோ...?

○

*(14.5.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயற்காடு...!

“

உழவிற்கு வயலோரம்
அப்பா போயிடுவார்!
பின்னாலே நானும்
குதூகலமாய்ச் சென்றிடுவேன்!
காட்டோர வயல்வெளிதான்
ஊரெல்லாம் கடந்துபோவோம்!
நாட்டுக்குள்ள இல்லையையா
எங்கள் ஊரு வயல்வெளிகள்...!

காட்டாறு வழிமறித்து
நீர்ப்பாய்ச்சி வயல் செய்தோம்!
குளத்து நீரைத்தான் விட்டு
வனமெல்லாம் வயல் செய்தோம்!
இரவுநேரத் தீவறையில்
கூதல் காய்ந்திடும் நேரம்- அங்கு
கச்சான் கடலைஎன
கனபேராய்ச் சேர்ந்துஉண்போம்...!

காதருகே நிற்பதுபோல்
காட்டுநரி ஊளையிடும்!
கரடியும் இருக்குதென்று
காதோரம் கதைப் பேச்சு!
வரம்புநீரில் முகம் கழுவி
தீவறையில் தேனீர் வைத்து
ஆட்டுக்காலைக் கடித்துவிட்டால்
காலைஉணவு தீர்ந்துவிடும்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனைக்கும் சந்தோசம்
அளவில்லாக் கொண்டாட்டம்!
விவசாயிமகனென்றால்
ஊருக்குள்ளதனிமதிப்பு!
குடலைப் பருவம் வந்துவிட்டால்
நிறைமாதக் கற்பிணிபோல்
ஏத்துக் குடிலமைத்து
எந்நேரமும் காவல்தான்...!

நாட்செல்ல நாட்செல்ல
நமக்கெல்லாம் சந்தோசம்!
கதிரெல்லாம் அசைந்தாடும்
வரம்பிலெல்லாம் தலைசாயும்!
பறுவத்திற்குப் பொங்கலிட்டு
அறுவடை தொடங்கிடுமே!
அரிவுவெட்டு இல்லை– ஐயா
மிசின் வெட்டுத்தான் இப்போதெல்லாம்...!

எங்களூர்ப் பெண்கள்
வயலுக்கு வாறதில்லை!
காட்டுவயல் எண்டதால
காத்துக் கறுப்புப்பிடிச்சிடுமாம்!
ஆற்றோரக் குயில்பாட்டு!
வயலோர நீரோடை!
மூன்றுபோகம் நெல் விளையும்
புதுமையான பூமியையா!
உழவுத் தொழில் போற்றிடுவோம்
வயல் வெளிகள் விதைத்திடுவோம்
வருங்காலச் சந்ததிக்கு
வளமான வாழ்வமைப்போம்...!

o

(12.2.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழ்மையின் குரல்...!

"

நான்கு சுவற்றுக்குள்
நான் இருந்து பேசுகிறேன்!
நாவரண்டு போகிறது
நாலுகாசு இல்லாமல்!
பாணும் வாழைப்பழமும்
பருப்பும் சோறுமென்று
எத்தனைநாள் கடந்திருப்பேன்!
யார் செய்த குற்றமிது...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளின் பிள்ளைகள்
எத்தனைபேர் இப்படியோ?
பசியோடு ஒருபக்கம்
படிப்பும் நகருதையா!
மஹாபொல ஐயாயிரம்
எப்பத்தான் வந்திடுமோ?
ஆனாலும் அதைநம்பி
எத்தனைநாள் இருந்திருப்பேன்...!

அத்தனைக்கும் கடன்கள் பல
அக்கம் பக்கம் இருந்திடுமே!
வாறகாச என்னசெய்ய
நான்கு பங்காய்ப் போயிடுமே!
என்னத்தைச் சொல்லிஅழ
எப்போதும் வேதனைதான்!
மாதம் முடியுமுன்பே
வாடகைக் காரர் வேறு...!

நான்குவருடப் படிப்போ
அதைக்கடந்து போகிறது!
யாழ்ப்பாணக் கம்பஸ் என்றால்
காலம் இழுபடுமாம்!
எப்போமுடியும் படிப்பென்று
கனகாலக் காத்திருப்பு!
என்னதான் செய்வேன்– நான்
என்னைநம்பும் குடும்பத்திற்கு!
போரிலும் மீண்டவர் நாம்
வறுமையிலும் அகப்பட்டோம்!
போவதெல்லாம் போகட்டும்
கல்வியால் மீண்டெழுவோம்...!

○

*(27.9.2019)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறிப்போன காயங்களின் வலிகள்...!

"

வண்ண வண்ண வடிவினதாய்
இவ்வெளியில் வீற்றிருக்க!
தத்திவரும் முத்துமொழி
சில்லென்று முத்தமிடும்!
சித்திரம் போல் பூஞ்சிவப்பு
சித்திரிக்கும் காலையிலே!
தேன் பிசைந்து வைத்திருக்கும்
செவ்விதழாய் நவில்கின்றேன்!
பலகோடி வணக்கங்கள்
தேன் மழையாய்ச் சிதறட்டுமே...!

மீளத்திரும்பாத அந்தப்
பள்ளிநாட்கள்..
ஆறிப்போன காயங்களாய்
வலிக்கின்றன!
நான்...
காலைப் பொழுதிலே
ஆழத்தூக்கம் அடியோடுகலைந்து
பள்ளிக்குத் துள்ளிவரும்
வழமையான நேரம் அது!
ஆழ மண்கிணற்றில்
அமைதியாய் அள்ளிக் குளித்து
வெண்ணாடைகள் அலங்கரித்து
அழகாய்க் காட்சிதர!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மாநான் போகப்போறன்
சாப்பாட்டைத் தாங்கோவன்'
'இந்தாபத்து ரூபாய்
கன்ரீன்ல ஏதாச்சும்
வாங்கிச் சாப்பிடு'
அம்மா அலறி அடிக்கையிலே!
உச்சி முகர்ந்துவந்து
படலையைத் திறக்கையிலே
பக்கத்துவீட்டுத் தோழி
டப்பென்று வந்துநிற்பாள்!
'அம்மாராட்டா.. ராட்டா..'
பள்ளிக்குச் சென்ற
அன்றைய கற்றல் காலம்!

'அ'படிக்க அரிச்சுவடி மட்டையும்
ஔவைப் பாட்டியின் ஆத்திசூடியும்
நிலாப்பாட்டுடன்- பாட்டி
வடைசுட்ட கதைகளும்
எம்மை அலங்கரித்த
அது ஒரு காலம்!
காற்றோடுகை கோர்த்து
கலகலப்பாய் வந்த- அந்தப்
பள்ளி வளாகம்!
இடைவேளைமணி ஒலிக்கமுதல்
இரண்டு தடவை
தண்ணீர்த் தாகம் என்பதும்
இருபதுதடவை
பசிக்கிறது என்பதும்
நன்றாக நினைவிருக்கிறது!

ஆசிரியரில்லா நேரத்தில்
மேசையை மேளமாக உருவாக்கி
இனிய இசைபாடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை நினைவுகள்!
சண்டைகள் பலவும்
நட்புக்குள் தோன்றியே மறைந்த
வசந்தகாலம் அது!
அழிப்பானின் அடைசலை எடுத்து
ஆடுபந்து விளையாடியதும்
ஆட்ட முடிவில் ஆட்டக்காரருக்கு
ஆசிரியர் அடிதந்ததும்
இன்னும் நினைவிருக்கிறது!

புத்தகம் சுமக்கும் கைகளுடன்
காதலியின் துப்பட்டா- சுமக்கும்
கைகளும் இருக்கத்தான் செய்தன
அந்தப் பள்ளிக் காலங்களில்!
கவலையில் சாய்ந்த
நண்பனின் தோளும்
மகிழ்ச்சியில் சாய்ந்த
பள்ளிச் சுவரும்
இடைவேளையில் ஒலித்த
மணியின் ஒலியும்
என்றும் மறப்பதில்லை
எம் நினைவில் இருந்து!
வானிலே பறக்கும்
நூலறுந்த பட்டங்களாய்ச்
சுற்றித் திரிந்த அந்தப்
பள்ளியின் நாட்கள் - இப்போ
ஆறிப்போன காயங்களாய்
வலிக்கின்றன...!

○

(கவியரங்கம், 2019, தமிழமுதம், கலைவிழா,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் குருந்தூர் மலை...!

"

முல்லைநிலப் பசுமையின் மத்தியில்
அதோ தெரிகிறது– எம்
குருந்தூர் மலை!
எம் முன்னைய சந்ததி
பொங்கலிட்டு மடைபரவிய– எம்
குருந்தூர் மலை
அதோ தெரிகிறது!
பௌத்தமதக் கொடிகள்
அந்தோ காற்றிலே
வீரியமாய்ப் பறக்கின்றன!
வயல் வரம்புகளைத்
தாண்ட முடியவில்லை!
தொல்லியல், பௌத்தத்தை
நிலைப்படுத்திக் கொள்கிறது!
இன்னும் சில
வருடங்கள் செல்லட்டும்
சுற்றுலா போவோம் வாரீர்!
கையிலே ஒலுவையும்
அல்லியையும் ஏந்திக்கொண்டு...!

o

*(நடுகை இதழ், 24.05.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகித் தாய்...!

நந்திக் கடலோரம்
கண்ணகிமுகம் தெரியும்!
வீசும் உப்புக் காற்றும்
அவள் புகழ் பாடும்!
பாக்குத் தெண்டலுடன்
நேர்த்திக் கடன் தொடங்கி
காட்டு விநாயகரோடு
சடங்குகள் நகரும்!

உப்பு நீரிலே
விளக்கு எரிந்திடும்
தெரிகிற ஒளியிலே
அவள் அருள் நிறையும்!
வட்டக் களரியில்
கோவலனார் கூத்தும்
பணிச்சைமரக் காற்றோடு
எம்முடன் கதைபேசும்!

வைகாசி விசாகம்
ஊர்கூடி உறவாடிடும் நேரம்!
காவடி பாற்செம்பு
கற்பூரச் சட்டியென
பொங்கலிட்டு மடைபரவி
உனைநாம் தொழுகிறோமே!
வன்னியைக் காத்திடும்
கண்ணகித் தாயே!
எம் வாழ்க்கைக்கு
ஒளிவீசி
அருள்புரிவாய் நீயே...!

(20.06.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா...!

"

வளம் கொண்ட வாழ்வு
வளமிழந்து போகிறது!
காட்டு வாழ்வு போல்
காரிருள் சூழ்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை புரிந்தமுகம்
பொலிவிழந்து போகிறது!
விலங்கு பறவைகள் தான்
சுதந்திரமாய்த் திரிகின்றன...!

ஓய்வில்லா மனிதனை நீ
ஓய்வாக்க வந்தனையோ?
கண்ணில் படாமலே நீ
கணக்கற்றுப் போகின்றாய்!
உன்னில் படுவோரைக்
கல்லறை ஆக்குகின்றாய்...!

ஆட்டம் போட்ட மனிதரைநீ
வீட்டிலே முடக்கிவிட்டு
இயற்கையை மட்டும் நீ
இன்பமாக்கி விட்டாய்!
எங்கிருந்து வந்தனையோ?
வேரறுத்துச் செல்கின்றாய்!
சாதிமதம் பார்க்காமலே
சமத்துவமாய்த் தண்டிக்கிறாய்...!

ஊரடங்கு போட்டதிலே- இங்கு
அடுப்பில் உலை ஏறவில்லை!
பலதேசம் தனித்திருந்து
பகலிரவாய் விழித்திருக்கு!
பொறிகலங்கித் தவிக்கிறோம்
கொரோனாவே போய்விடு!
பொதுவிடுமுறை தந்துவிட்டு
ஓடி மறைந்துவிடு...!

(வெட்சி இதழ், வைகாசி, 2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயி...!

"

சேற்றிலேகால் புதைக்கும்
மனிதர்களால் – நாம்
சோற்றிலே கை வைக்கிறோம்!
வான்மழையின் பிரியர்கள்!
வருடம் முழுவதும் உழைத்தாலும்
ஓயாத உழைப்பாளிகள்!
தம் வியர்வையைச் சிந்தவைத்து
எம் உயிரைக் காத்தவர்கள்!

குயிலின் ஓசையும் மயிலின் அகவலும்
இவர்களின் சங்கீதம்!
எருதுக் கூட்டமும் பட்டிமந்தைகளும்
இவர்களின் தோழர்கள்!
தென்னோலை வேய்ந்த
சின்னஞ் சிறுகுடிசைகள்
இவர்களின் இருப்பிடம்!

அவர்களால் நாம் வாழ்ந்தாலும்
அவர்களின் வயலும் வயிறும்
என்றும் வரண்டே கிடக்கின்றது!
வளர்த்த பயிர்களால் வனப்போடு
ஆயிரம் சுமைகளைத் தாங்கியவன்
விடிவில்லா வாழ்க்கையால்
மரித்தே தினம் போகிறான்...!

○

*(06.10.2015)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமை...!

"

அழகுற உடுத்தி
தலைமுடி திருத்தி
தோழமைக் கூட்டத்துடன்
துடிதுடிப்பாய் உலாவந்த
அற்புதநினைவுகள் - இன்னும்
என்னைவிட்டு நீங்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது முதுமை!
ஆற்றுப் படுக்கையின்
வரண்டபகுதியைப் போல்
முதுமை வரைந்த கோடுகள்
என் முகத்திலே தெரிகின்றன!

தலைமுடி நரைத்து
உடல் தசைசுருங்கி
அழகினை இழந்து
பொழிவது சிதைந்து
ஊன்று கோலுடன்
தனித்தே நிற்கிறேன்!

பாசத்தில் பரவிய
பார்வையும்
தேவையில் நிறைந்த
ஏக்கமும்
நடப்பதில் கொஞ்சம்
தயக்கமும்
பற்களில்லாப் பொக்கைவாய்ச்
சிரிப்பும் - இன்று
என்னைத் தள்ளாட வைக்கின்றன!

பத்து மழலைகள்
பெத்தென்ன இலாபம்?
பத்திரமாய்ப் பார்த்திட
ஆளில்லா வலிகளோடு
வெடித்துப்போன பாதங்கள்
முதிர்ந்து போன உடலைச்
சுமந்து எங்கோ செல்கின்றதே!

○

*(7.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு...!

"

நிழலாக இருந்தவன் நீ
நினைவாக மாறினாய்!
கண்ணிமைக்கும் நேரத்திலே
கண்ணீர்த்துளிஆகினாய்!

இதயங்களைத் தவிக்கவிட்டு
தடல்புடலாய் வெளியேறினாய்!
இமைகளை நனையவிட்டு
எங்கோ நீ பயணமானாய்?

பள்ளிக்கூட நாட்கள்
மாலைநேர மைதானங்கள்
திருட்டு மாங்காய் நேரங்கள்
சாலையோரப் பயணங்கள்
எத்தனை வசந்தங்கள் - இன்று
நெஞ்சைக் கனமாக்குகின்றன!

கள்ளமில்லா உன்முகத்தைக்
கட்டிலிலே கண்டவேளை
கயவன் அந்தக் கடவுள் என்று
கதறிக் கதறி அழவைத்தாய்!

அழகான நம் நினைவுகளை
நினைத்து நினைத்துப்
பார்க்கிறேன்!
காலமுள்ளவரை - அவை
காவியமாய் வாழும்!

○

*(தை, 2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகாரப் பாதகத்தி...!

"

ஊர் விடியும் வேளையிலே
எம் குடியை ஏன் அழித்தாய்?
ஆழ்கடலே ஆர்த்தெழுந்து
பேரழிவை ஏன் தொடுத்தாய்?

தன்னவரை இழந்து மக்கள்
புலம்பெயர்ந்து இருக்கையிலே
உனது கரை ஊர்களெல்லாம்
பிணக்கோலம் கண்டதென்ன?

காலையிலே உனதருகில்
காலாறவே நடந்தோம்!
மணல் வீடு கட்டியே
மழலையோடு விளையாடினோம்!
ஆனந்தமாய் உன்மீது
அலைபாய்ந்தே நீச்சலடித்தோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையெனவே எழுந்து - உன்
அலைகளாலே மறைத்து விட்டாய்!
கடலென்றால் கருணை என்பர்
இன்றுமட்டும் ஏனோ நீ
கொலைகாரி ஆகிவிட்டாய்?

நீ ஆழக்கடல் நீரால் - எம்
ஈழக்கரை கொள்ள
வாழவழியற்று நின்றோமே அம்மா!
காற்று வெள்ளம் குண்டுமழை
போதாதென்று - நீயும்
தண்டித்தது நியாயமா?

அடிமைகளாய் நாம்
அழிக்கப்பட்டுப் போகையிலே
எம் சரித்திரத்தை
மூழ்கடித்துப் போனதேனோ?
போரிலும் எமை இழந்தோம்
நீரிலும் எமை இழந்தோம்!
அகிலத்தில் எமைப்போல்
பாவம் செய்தவர் யாரோ?

யேசுபாலன் பிறக்கையிலே
எமை இறக்கவழி செய்துவிட்டாய்!
உன் அலைகாணும் நேரங்களில்
எம் உடல்காணச் செய்துவிட்டாய்!
ஊழிக்கூத்து நீயாடி
கொலை செய்த பாதகத்தி
களங்கம் இன்றி நாம் வாழக்
கரைச்சல் இன்றி இருப்பாயா?
இறப்பதற்கு நாம் உள்ளோம்
புதைக்கத்தான் யாருமில்லை!

o

(கவிதைப்போட்டி, பிரதேச சாகித்தியவிழா, திருகோணமலை, 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரட்சி...!

"

பங்குனி வெய்யில்
பல்லுக்காட்டிச் சிரிக்கிறது!
விவசாயநில மெல்லாம்
துளிர்விட மறுக்கிறது!
மானிடத்து ஜீவன்களின்
மனிதமற்ற செயல்களினால்
மண்ணுலக உயிர்களெல்லாம்
மரணித்தே போகின்றன!

காடழிப்பின் உக்கிரத்தால்
வான்மழையும் சிந்தவில்லை!
மண்ணை நம்பி வாழ்ந்தவர்கள்
பட்ட கஷ்டம் கொஞ்சமில்லை!
ஏர் உழுத நிலங்களிலும்
ஏரிகளைக் காணவில்லை!
மாடுமேய்த்த பூமியிலும்
குளங்களையும் காணவில்லை!
ஆற்றுமணல் எல்லாம்
அகழ்ந்துவிலை போயிடிச்சாம்!


பருவகாலம் குழம்பியதால்
மாரிகோடையானதுவோ?
மனிதக் குரங்குகளால்
காலம் மாறிப்போனதுவோ?
என்னதான் நடந்தாலும்
ஏதும் தெரியாதது போல்
இயற்கையை எதிர்த்துக் கொண்டு
எப்படித்தான் வாழ்கிறாரோ?

o

*(3.4.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள நண்பா...!

"

எங்கே போய்விட்டாய்?
என் இனியதோழா!
சின்னஞ்சிறுவயதில்
துடுப்புமட்டை ஏந்தி
மைதான வெளிகளில்
வீரர்களாய் வலம் வந்தோம்!
நினைவு இருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென எங்கு மாயமானாய்?
முகவரியற்ற மனிதர்களுடன்
திசைபுரியா வனங்களில்
கண்டதாகச் சொன்னார்கள்!
நசுக்கப்பட்டவர்களுக்காய் - உன்
பிஞ்சுவயதிலே
நஞ்சைக் கழுத்தில் அணிந்தவனாய்
உனைக் கண்டதாகச் சொன்னார்கள்!

ஒன்றாகவே திரிந்த நீ
சத்திய வேள்வியில் என்னைத்
தவிர்த்துவிட்டுச் சென்றதேனோ?
மரணத்தைக் கண்டு
அஞ்சவில்லைநண்பா!
சுதந்திரக் காற்றைத்தான்
சுவாசிக்கத் துடிக்கின்றேன்!

இப்போதெல்லாம் இங்கு
வசந்தம் வீசுவதில்லை!
பௌர்ணமி இரவும்
வெளிச்சம் தருவதில்லை!
இத்தனைக்கும் பின்
என்னைப் பிரிந்து
எப்படி இருப்பாய்?
நானும் வருகிறேன்
என்னையும் கூட்டிச்செல்
உன் பயணத்தின் வழியே...!

○

(கவிதைப்போட்டி, கலைமன்றம்,
தி.உ வர்மலை விவேகானந்தா கல்லூரி, 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக் கட்டடங்கள்...!

"

சுதந்திர மூச்சுக்கள்
அடங்கிய இரவிலே
சடுதியானசப்பாத்துச் சத்தங்கள்!
இன்றல்ல நேற்றும் அன்றும்
வானம் இருண்டேதான் கிடந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவசவாகனங்களின் அலறல்
வீதிகளில் கேட்டிடும் இரவு!
ஈக்குருவி பறக்காததெருக்களில்
நாய்களின் ஓலம்!
இந்த இரவு
நம்முடையது என்று
யாழ்ப்பாணக் கோட்டைப் பக்கம்
வேட்டொலிகள் கேட்டதுவோ?

வெள்ளை நிறக் கட்டடம்
எரியூட்டப்பட்டதாய்
ஊரெல்லாம் கதைப்பேச்சு!
ஆசியாவின் அதிசயமாய்
வெள்ளை நிறக்கட்டடம்
கந்தக நெருப்பில்
சாம்பல் மேடு ஆனதோ?

தரப்படுத்தல் ஒடுக்குமுறை
போதாதென்று எண்ணியோ
பாதகர் இதையும் செய்யத்துணிந்தனர்?
தொண்ணூற்று ஆறாயிரம் புத்தகங்கள்
தொலைந்து போனவரலாறு
காலம் கடந்தாலும்
மறைந்துதான் போகுமோ?
நாற்பதுஆண்டுகள்
கழிந்துதான் போனாலும் - நாம்
இன்னும் அடக்குமுறையின் கீழே...!

o

(நீங்களும் எழுதலாம், வைகாசி, 2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா...!

“

உலக வரலாற்றின்
உன்னத காவியம்
நீதானே அப்பா!
அன்பென்ற சொல்லிற்கு
அர்த்தமும் நீதானே!
என்கனவுகளை நனவாக்க
உன் கனவுகளைத் தொலைத்தாயே!
நாம் கவலையின்றி வாழ – நீ
ஓடாக உழைத்தாயே!

கஷ்டங்கள் இருந்தபோதும் – நீ
இஷ்டங்களைத் தடுத்ததில்லை!
தத்தித் தத்தி நடைபழக்கி
நான் தடுமாறி விழுகையில் – நீ
கண்கலங்கி நிற்பாயே!
தோள்மீது தூக்கிவைத்து
உலகத்தைக் காட்டுவாயே!

உன் துக்கத்தை எல்லாம்
முத்தங்களாய்த் தந்தவரே!
வாழ்வுப் பாதையிலே
நிழலாக வந்தவரே!
நிலைமாறிப் போனாலும்
நீங்காத உறவாக
என்றென்னும் இருக்கவேண்டும்!

o

*(3.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றே...!

"

தென்றலாகி வரும் காற்றே
ஒருசேதி சொல்லாயோ?
என்னைச் சொல்லாமல் தீண்டிச்சென்ற
மாயம் என்னவோ?
தொட்டுவிடத் தானேஉன்னை
நானும் துடிக்கிறேன் - ஆனால்
கண்ணில் மண்ணைத் தூவித்
தினம் மாயம் செய்கிறாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஞ்சோலை இலைகளோடு
ஆடி நிற்கிறாய்!
அதைப் பார்த்து நானும்
உள்ளன்போடு பூத்துநிற்கிறேன்!
இரைச்சலாக இசை தந்து
வந்துபோகிறாய் - ஆனால்
புயலாகமட்டும் இங்கு
வந்துவிடாதே!

என்னுள்ளே நீவந்து
வாசம் செய்கின்றாய் - தினம்
உயிரோடு உயிராக
என்னைச் சேர்கிறாய்!
நிலாத்தூறல் வீசும்போது
குளிர் தருகின்றாய்!
தினமும் ஓய்வதில்லை
உந்தன் பணி இவ்வுலகிலே!

உயிர் இருக்கும் உனக்கு
உடலில்லையே - ஆனால்
உடலிருக்கும் எமக்கு
உயிர் நீதானே!
உன் தலையீட்டால் தானே
தினம் அலை பேசுது!
உன் சங்கமத்தால் தானே
குழல் இசை பேசுது!
நீ இல்லா உலகில்
உயிருண்டோ சொல்?
அந்த உயிரில்லா உலகத்தில்
அழகுண்டோ சொல்...?

(25.6.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் மழையே...!

"

கருமேகமே இங்கு
மழை தந்துபோ!
தவறாது வந்திங்கு
வளம் தந்துபோ!
களனியெல்லாம் விளைந்திடவே
அருள் தந்துபோ!
வறுமையெல்லாம் தொலைந்துவிட
நீவந்துபோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டகடன் கொஞ்சமில்லை
பட்டினிதானே!
போத்தல் தண்ணீர் குடிச்சபடி
வாழ்க்கை நகருமோ?
மண்ணைநம்பி
வயல் விதைத்தோம்
விளைச்சல் இல்லையே!
வெட்டிவந்த மின்னலோடு
கொட்டிவிடு மழையே!

கோடிகோடி துளிகொண்டு
பொழிந்து விடுவாயோ?
வாடிநின்ற பயிர்களுக்குத்
துடிஆட்டம் கொடுப்பாயோ?
வானத்து மேகங்களோ
சுமந்து போகுது?
உன்னைப் பொழிந்து
மண்ணில் மகிழ்ச்சி தினம்
பொங்க வைக்குது!

மழையான மழைத்துளியே
வந்து போய் விடு!
நாம் வளமாகவாழ்ந்துவிட
ஈரம் தந்திடு!
உழவர்களின் நிலத்தை
நீயும் சேறாக்கிடு!
உன்னைத் தினம் போற்றி
நாமும் சோறாக்குவோம்...!

o

(கவிதைப்போட்டி, அரச இலக்கியப் பெருவிழா,
திருகோணமலை, 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரைக் காணி...!

“

குத்தகைக்குக் காணிதேடி
ஊரெல்லாம் அலைந்து...
மூன்றுபோகக் காணியென்று
நிபந்தனையைக் கேட்டபோது
தினசரி கனவில்
கலையாமல் வருகிறது...
பாதிவிலைக்கு விற்ற
எம் பரம்பரைக் காணி...!

○

(நீங்களும் எழுதலாம், பங்குனி, 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை...!

"

அரசியலின் அலட்சியத்தால்
பசியோடு பலரிருக்க
உடலும் வாடுதையா
உணவில்லா நேரத்திலே!
எம்மவரே இல்லாத
அடிமை தேசத்தில் பிறந்ததால்
வறுமையே வாழ்வென்று
கிடைத்ததைப் புசிக்கிறேன்!

உழைத்திடவே பலமில்லை
உருவத்திலே சிறியவன்!
பிழைக்கவே வழியின்றி
வேலைதேடி அலைகிறேனே!
பட்டம் முடிச்சவன்
நாதியற்று அலைகையிலே
படிக்காத எம்மவர்க்கு
வேலைதான் கிடைத்திடுமோ...!

o

*(12.4.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் தாலாட்டு...!

"

ஆராரோ ஆரிரரோ...
ஆராரோ ஆரிரரோ...
உள்ளங்கையில் நாளெடுத்து
உச்சி முகர்ந்தவனே
உன்னைச் சுமப்பதிலே
உள்ள மெல்லாம் நிறையுதடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் முகத்தில் முத்தம் வச்சு
உன்னைஅணைக்கையிலே
எண்திசையும் உனதுபுகழ்
ஏக்கமாய் ஒலிக்குதடா!

வானத்து முழுநிலவே
வையகத்து மலர்ச்சரமே
தேனாக ஒரு வார்த்தை
தெளிதமிழில் சொல்லாயோ?
அப்பா என்றழைத்து
ஆரவாரம் தந்தவனே – உன்
சிங்கார முகம் கண்டு
கனகாலம் மகிழ்ந்திருப்பேன்!

கண்ணே கலைமானே
அணில் கோதாமாம்பழமே
ஆசைப் பைங்கிளியே
அழகாகக் கண்ணுறங்காய்!
பூக்களெல்லாம் பூத்திருக்கு
பொன்வண்டும் காத்திருக்கு
கானகத்துக் கவிக்குயிலும்
உனக்காகப் பாடுதையா!

தேனே தினையமுதே
தேனினிக்கும் பலாச்சுளையே
நீயுறக்கம் கொண்டால்தான் – என்
கண்ணுறக்கம் கொள்ளுமடா!
மன்னவனே கண்ணுறங்காய் – என்
மாதவனே கண்ணுறங்காய்!
ஆராரோ ஆரிரரோ...!
ஆராரோ ஆரிரரோ...!

○

*(கவிதைப்போட்டி, விபுலானந்தர் தினம்,*
*தி.விபுலானந்தாகல்லூரி, 2013)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழஞ்சோற்றுச் சாதம்...!

"

சிவப்பரிசிப் பழஞ்சோறு
சுவையான பழஞ்சாதம்!
அம்மா அனுதினமும்
உருண்டையாக்கித் தரும் சாதம்!
பள்ளிக்கூடம் போகமுன்னே
இதுதானே உண்டிடுவோம்
அண்ணா அக்கா தம்பியென
அடிபட்டுச் சாப்பிடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்து மண்மணக்கும்
பண்பாட்டு உணவுகளில்
பழஞ்சோற்றுச் சுவையை
அறியாதார் யாருமுளர்?
பச்சைமிளகாய் வெங்காயம்
அரிஞ்சுபோட்டுக் குழைச்சசோறு
ராத்திரியே தண்ணீர் ஊற்றி
காலையிலே வடித்தசோறு!

ஊறுகாய் கொஞ்சம் விட்டு
புளித்தயிரும் கொஞ்சம் சேர்த்து
அம்மாகுழைச்ச சோறு
நா நிறையச் சுவைதருமே!
கருவாட்டுக் குழம்போட
தொட்டுத் தொட்டுத் தின்றாலும்
வறுமையான வாழ்வெல்லாம்
வளமாகத்தான் தெரியுமையா!

வயலோர உழவருக்கு
உடலுறுதி தரும் சாதம்
கிராமத்து மக்களின்ர
உதிரமெல்லாம் இதுதானே!
ஏழைகளின் வயிற்றைக் காக்கும்
பொன்னானஅமுதமையா!
காலம் மறைந்தாலும் – எம்
நினைவுகளில் தொடருதையா...!

(கவிதைப்போட்டி, தமிழ்மொழித்தினம்,
தி.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்டல்...!

"

தலையை நனைத்த
மழைத்துளிகளைத் துடைத்தபடி
புதையுண்டு போனஎன்
பாடசாலைக்குள் நுழைகிறேன்!
வகுப்பறைத் தூண்கள்
தரையிலே கிடக்கின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதான வெளிகளில்
தூர்ந்து போன பதுங்குகுழிகள்
பழைய நினைவுகளை
மீட்டல் செய்தன!

சீப்பிளேன் சத்தம் கேட்டு
பள்ளிமணி அடித்தவுடன்
எல்லோரும் பங்கருக்குள்ள
ஓடிப்போன நினைவுகள்!
கிபிர் வந்து குண்டு போட்டுப்
போன பின்னும்
பதுங்கு குழிகளே – எம்
வகுப்பறை ஆனதும்
இன்றும் மனதில்
வந்து போகின்றன!
இதயம் கனத்து
கண்ணீர் வடித்து
விழிகள் கரைந்து நிற்கின்றன!

வாசலைப் பார்த்தபடி
எனக்காய்க் காத்திருந்த
கரும்பலகையின்
சிதறல்களைக் கண்டு
குலுங்கிக் குலுங்கி அழுகிறேன்!
என் தொண்டைக்குழியில்
வார்த்தைகள் எழாமல்
மடிந்தே போகின்றன!
மீண்டும் மீண்டும்
புதுப்பிக்கப்படும் அந்த
நினைவுகளால்...!

o

(கவிதைப்போட்டி, கலைவாரம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை...!

"

சுழன்று சிரித்தபடி
நிலத் தூசிகளை யெல்லாம்
எடுத்துப்போகின்ற - இந்த
காற்றுக்கூட ஏதோசோகத்தைச்
சொல்லித்தான் போகிறது!
ஓ... அந்த ஊர்க்குருவியும்
தாழ்ந்தே பறக்கிறது!
தூரத்து ஒற்றைப் பனைமரமும்
புன்னை மரங்களும்
கிளைகளைஅசைத்து - ஏதோ
இரகசியம் சொல்கின்றன!

'மண்மீது நேசம் கொண்டவர்களே
இன்றே தூங்கிவிடுங்கள்
இல்லையேல் - நாளை
எண்ணற்ற சுமைகளோடு
கல்லறை சேர முடியாமல்
காற்றாகிப் போகலாம்!'
நாளைய விடியலைக்காண
இருக்கமாட்டோம் என்பதையா
இவை அடையாளப்படுத்துகின்றன?
எதுவரை இது தொடருமென்று
எதிர்காலத்தை எதிர்பார்த்தபடி
என்னையே தொலைத்து
நினைவிழந்து போகிறேன்...!

○

*(7.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர்வு...!

"

நாங்கள் கருவறைக்குள்
சிறையிருந்த போதே
முகவரிகளை
இழந்துவிட்டோமா?
ஒவ்வொரு இரவும்
ஒவ்வொரு பகலும்
ஒவ்வொரு யுகங்களாக
விடியலின் வரவுக்காய்
எம்மை ஏக்கங்கொள்ள
வைக்கின்றன!

ஒருவழிப் பாதையில்
எங்கு போகிறோம்
எனத் தெரியாது
கால்கள் நகருகின்றன!
நீர்வற்றிப் போன
எனதுகண்களுக்கு
எம் தேசமே
கருகிப்போவது தென்படுகின்றது!
நானும் என் சொந்தங்களும்
புதுக்குடியிருப்பிலிருந்து
மாத்தளன் நோக்கி
இடம்பெயர்ந்து செல்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கணாங் குருவியின்
காயாத பச்சைக் கூடுகளில்
புகை கிளம்ப...
இறந்த உடல்கள்
சிதறிக் கிடக்க...
எரியும் கொட்டகைகளுக்குள்ளால்
குழந்தைகளின் இடைவிடாத
அழுகுரல்களுடன்
புலம்பெயர்ந்து செல்கிறோம்!
பசிக்கத் தொடங்கிற்று!
தண்ணீர் விடாயால்
நாவும் வரண்டது!
தலையில் சுமைகளுடன்
வலிகளைச் சுமந்து
இரவுபூராகவும்
பதுங்கியே செல்கிறோம்!

நிலவு போன்ற
பராவெளிச்சத்தில்
நெருப்புத் தணல்களாய்
ரவைகள் இரைந்துபோக
குழிகள் தோறும்
விழுந்துவிழுந்து
புலம்பெயர்ந்து செல்கிறோம்!
பூவும் பிஞ்சும்
காயும் கனியும்
புதைகுழிகளில்
சிதறியே கிடந்தன..!

○

*(7.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தநாள்...!

"

அண்ணாவும் நானும் - அந்த
வயலோர வரம்புகளில்
ஓடியாடித் திரிந்த
அந்தநாள் ஞாபகம்
என்னைவிட்டு
நீங்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை என்றாலே
புதுக்குடியிருப்பில் இருந்து
கள்ளியடி றோட்டால
வற்றாப்பளை போய்வருவம்!
போகும் போதும் வரும் போதும்
எமக்கு ஒரே கொண்டாட்டம்தான்!
சூரப்பழம்,நாவற்பழம்
இலந்தப்பழம், ஈச்சம்பழமென்று
என்னதான் இல்லை
அந்தறோட்டில?

கள்ளியடி ஆற்றில
நீச்சல் போட்டு
ஒய்யாரமாய் பாட்டிசைத்து
கேப்பாப்புலவு கடந்திடுவோம்!
நந்திக்கடற் கரையில்
பனிச்சம்பழம் பொறுக்கி
அம்மனையும் கும்பிடுவோம்!
சிறுநண்டு துரத்தி
கடல்நீரில் விழுந்தெழும்பி
அம்மாவிடம் பேச்சுவாங்கிய
அந்தநாள் ஞாபகம்
என்னைவிட்டு நீங்கவில்லை!

ஊற்றங்கரை போகவேணும்!
தாமரைக்காய் ஆயவேணும்!
அடுத்த விடுமுறைக்கு
நண்பர்களோடு
திட்டம் போடும்- அந்த
வசந்தகால நினைவுகள்
இன்றும் என்னைவிட்டுப் போகவில்லை...!

(12.7.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணிற்குப் போகிறேன்...!

"

முட்கம்பி வேலிகளே!
நாமிருந்த கூடாரங்களே!
துள்ளித் திரியும் பசுக்களே!
முகாம்களுக்குமேலால் பறக்கும்
நாராய் இனங்களே!
இன்று நான்
மண்ணுக்குப் போகிறேன்!

நான் சிறுவயதில்
ஓடியாடித் திரிந்த வீதிகளில்
நடக்கப் போகிறேன்!
நான் பிரிந்துவந்த
ஊர் மரங்களையும், செடிகளையும்
தழுவப் போகிறேன்!
பரம்பரைக் காணியையும்
ஆறுகளையும், மலைகளையும்
பசும்பெரும் காடுகளையும்
பழைய நினைவுகளோடு
பார்க்கப் போகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் மறைந்து
பலகாலம் போனாலும்
இன்றுதான் நான்
ஊருக்குப் போகிறேன்!
இருளுறைந்த சிறைகளில்
அடைக்கப்படுவதற்கா
பூமியில் நாம்
பிறந்து வந்தோம்?
கொட்டும் பனியும் இரவும்
வானத்து நட்சத்திரங்களும் நிலவுமே
துணையாக இருந்தன!

ஓடுகின்ற மேகங்களே
நில்லுங்கள்!
உங்கள் மகன்
விடுதலைபெற்று
வருகிறான் என்று
உறவுகளிடம் சொல்லுங்கள்!
அகதிப் போர்வைக்குள்
முகம் தொலைந்து போனவன்
விடுதலைபெற்று
வருவதாய் சொல்லுங்கள்!
முட்கம்பி வேலிகளே
போய்வரவா?
நிரந்தரமாய் உமைப்பிரிந்து
தொலைதூரம் போகிறேன்!
மீண்டும் வரமாட்டேன்!

o

(7.7.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாத்மா...!

"

போர் மூண்டநிலத்திற்குச்
சுதந்திரம் வேண்டும்
விடுதலை வாங்கித்தர
மகாத்மாவே பிறந்துவிடு!
ஈழத்தவர்களின் விழிகள்
குருடாகி விட்டன!
புதுப்பாதையில் அன்று
விடியாத பொழுதுகள்
புத்துயிராய் இன்று
புலரட்டும்
மகாத்மாவே பிறந்து விடு!

ஓயாத அழுகையால்
கண்ணீர் வற்றிவிட்டன!
பூமியும் அழுதுதானோ
வானமும் வற்றிப் போனது?
ஒவ்வொரு நாட்களும்
இலையுதிர் காலம்தான்!
மலர்களைப் பார்க்கும்போது
மனம் தவிக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைகளை இயற்கைக்கு
இலவசமாய்த் தந்துவிட்டு
வானத்து நிலாவுடன்
விடியாத இரவுகளை
எண்ணிக் கொண்டிருக்கிறேன்!
மகாத்மாவே பிறந்துவிடு!
அடிமை யுகத்திலே
விடுதலையை வேண்டி
சிக்கித் தவிக்கிறோம்!
வெள்ளை உருவங்களை
வெற்றி கொண்டநீ
இருண்ட சிறையை
உடைத்தெறியப் பிறந்துவிடு!

பனிப்போர்வை
மலை முகடுகளின்
வழுக்கும் பாதைகளைப் போல்
நான் சோகமுகடுகளில்
பயணப்பட்டுக்கொண்டிருக்கிறேன்!
சூரியன் எழும்போது
மழைமேகம் மறைக்கிறதே!
ஒப்பாரிகள்தான்
தாலாட்டாய்க் கேட்கின்றன!
அசையாத சோலைகள்
காற்றுக்காய்க் காத்திருக்கின்றன!
மகாத்மாவே பிறந்துவிடு
சுதந்திரத்தைவாங்கி
எம்மிடமே கொடுத்துவிடு...!

○

*(13.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகளில்தான் வசந்தம்...!

"

ஓ!
இந்த வெள்ளை வானத்தில்
இருட்டு மொய்த்துவிட்டது!
கிழக்கில் கதிரவன்
உதிக்கிறபோதும்
நாம் இருட்டில்தான் வாழ்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைகளும் இல்லை
பயணங்களும் இல்லை
மேகங்கள் மட்டுமே
வீரியமாய் அலைகின்றன!
பாதிக்கப்பட்ட
பகுதிகளைப் புனரமைக்கும் முன்
எம் தேசத்துஉறவுகளைப்
புனரமையுங்கள்!

திசைகளின் தேசமெங்கும்
இருட்டின் ஆதிக்கமே!
பார்க்கும் இடமெல்லாம்
ஒப்பாரியின் ஓலங்களே!
தென்றலின் வாசிப்பில்
மரணத்தின் ஜாலங்களே!
மென்பனித் தூறலில்
கண்ணீரின் கோலங்களே!

வானமும் பழையது
மேகமும் பழையது
காற்றும் பழையது
சூரியனும் பழையது
ஆனால்
வசந்தம் என்பதை நாம்
வார்த்தைகளில்தான்
காண்கிறோம்...!

*(15.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுவாகல் பாலம்...!

"

ஊருக்குள்
ஊடறுக்கும் சிறுகடல்!
பற்றைக் காடுகளின்
வனாந்தரஅழகில்
ஆங்கே
ஒற்றையடிப் பாதையென
நீண்டு போகிறது
ஒருபாலம்!
இக்கரையில் இருந்து
அக்கரையைப் பார்க்கையில்
கோயில் கோபுரத்தில்
கண்கள் உட்காரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையும் மாலையும்
வீச்சுவலை மீனவர்கள்
கொக்கென ஆங்கே
மீனிற்காய்த் தவமிருப்பர்!
கடலினைக்
கிழித்துக்கொண்டு இராணுவம்
படகுகளில் ரோந்துவேறு!

மீன்குஞ்சுக் கனவோடு
கடலுக்குள் முக்குளித்து
இரால் பிடிபட்டுப்போன
அதிசயமாய்
பெண்டுகள் ஆங்கே
சிறுகடலைக் கடந்துபோவர்!
அபிவிருத்தி என்று பல
வீதிகள் வந்து
வடக்கின் வசந்தமாய்
புதுப் பாலங்கள் எழுந்தாலும்..
உப்புக் காற்றோடு
இப்பாலம் மட்டும்
துடுப்பிழந்து கிடக்கிறது!

போர்மூண்ட தேசத்தின்
எஞ்சிய வடுவாய்
அதோ!
அந்த வட்டுவாகல் பாலம்!
இன்னும் அப்படியே...
மக்களோடு மக்களாய்...
வலிகளோடு வலிகளாய்...!

o

*(16.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னைத் தேடும் மனது...!

“

இன்னும் இருக்கிறது
உன்னுடைய தடையங்கள்!
நீ விட்டுச் சென்ற
கைக்குட்டை!
எப்போதோ நீபாடிய
பாடல் வரிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் நானும்
கடைசியாய்ப் பார்த்த
சினிமாச் சிட்டை!

நம் சுற்றுலாப் புகைப்படங்கள்!
உன் பாதக் கொலுசுகளின்
ஓசை!
இருவிழிப் பூக்களில்
நீ தந்த முத்தங்கள்!
நீ என்னோடு வாழ்ந்த
கடைசி நேரக் கனவுகள்
உட்படஎல்லாமே
என்னுடன் இருக்கின்றன!
ஆனால்
நீமட்டும்
என்னுடன் இல்லையே!

தனிமையில் தவித்து
என்னுள் உன்னைத்
தேடுகிறது மனது!
இக்காயத்தை
யார் வந்து
ஆற்றிவிடப் போகிறார்கள்...?

(18.7.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்து வாழ்வு...!

“

பல நூறு வருடங்களாய்
ஏன் உங்கள்
லயம் மட்டும்
அப்படியே கிடக்கின்றது?
எத்தனை
கனவுகளைச் சுமந்து
மலைவளம் ஏறினீர்?
அத்தனையும் இன்று
உரமாகிப் போனதுவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கு உழைத்து
மடிந்த போதும்
உம் உடலுக்கு மேலே
கல்லறை உண்டோ?
அட்டை குடித்த
இரத்தத்தின் மிச்சத்தை
முதலாளி வர்க்கம்
உறிஞ்சியே குடிக்கின்றது!
மத்தியமலை நாட்டின்
முதுகெலும்புகளாய்
நாட்டையே நிமிர்த்திய
தியாகிகள் நீங்கள்!
நாட்டையே ஒளியேற்றி
உம்மையே உருக்கிய
மறவர்கள் நீங்கள்!

இப்படி எத்தனை
காலம்தான்
வளமற்ற வாழ்வோடு
நகரப்போகிறீர்கள்?
உம்பிள்ளையை ஆங்கே
அடிமையாய் அடக்கிவிட
வேண்டாம்!
கல்வியைக்
கையில் கொடுங்கள்!
விடியலின் வாசல்
மெல்லத் திறக்கட்டும்...!

*(18.7.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணங்கள்...!

"

நித்தமும் என் முற்றத்தில்
நினைவுகளாய்
வந்து போனாய்!
உன்னை மெல்லத்
தொட்டுச் செல்லும்
அந்தக் காற்றும்
இன்று ஏன் வீசவில்லை?
கடந்து சென்ற வசந்தங்கள்
இப்போ
கரிய இரவுகளோடும்
துன்பங்களோடும்
அசைபோடப்படுகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தந்த
முத்தங்களின் ஈரங்கள்
என் இதழ்களில்
இன்னும் காயவில்லை!
வாசலிலே
தினமும் காத்தபடி
உன்னையே தேடுது மனசு!
கிடுகு வேலிகள் போல
உன் நினைப்பிலே
சாயுது என் மனசு!
நீ நடக்கும் பாதைகளில்
நெருஞ்சி நெருட
நான் நடக்கிறேன்!

நெஞ்சத்தளிரில்
நினைவுகள் வீழ்ந்து
கருகிடத் துடிக்கிறேன்!
உன்னோடு கழிந்து போன
ஓராயிரம் கணங்களின்
நினைவுகள்
பசுமையாய் மனதில்
விரிகையில்
நீயும் அழிந்து போகமாட்டாய்!
இதயத்தின் ரணங்களும்
ஆறிவிடாது...!

o

(18.07.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவமற்ற தேசம்..!

"

ஆட்களற்ற
கடல் வெளியில் இருந்து
அரவமற்ற
என் தேசத்தைப்
பார்த்துக் கொண்டிருக்கிறேன்!
செல்லரித்துச் சிவந்த மண்ணில்
இன்று புதிய கன்றுகள்
முளைவிடவில்லை!
காற்றும் வீசவில்லை!
சூரியனும் உதிக்கவில்லை!

காற்றோடு காற்றாய்ப்
பேசிக்கொள்ளும்
பறவைகளின் கீச்சொலிகள்
வானத்தைப் பிளக்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூறையாடப்பட்ட
எங்களது தோட்டமும்,
குடிசைகளும், வீதிகளும்
சுடுகாடாய்த் தெரிகின்றன!

அதோ!
எங்கட வயல்வெளிகள்,
நீரோடைகள்,
ஆங்கே பூத்திடும்
ஆம்பல், தாமரைகள்,
முற்றத்தில் தொங்கிய
மாமரத்து ஊஞ்சல்
ஓ! அத்தனையும்
அசைவற்றுக் கிடக்கின்றன!

நேற்றைய காலையும்
மலர்ந்து முடிந்தது
இன்றும் மலர்ந்தது – பின்
முடிந்து கொள்ளும்...
ஆயிரம் ஆயிரம்
நினைவுகள் வரும்
ஆனாலும் அரவமற்ற
என் தேசத்தை
அமைதியாய் இருந்து
பார்த்துக்கொண்டிருக்கிறேன்...!

○

(19.07.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அவள்..!

"

வெட்கிச் சிவந்த
அந்தி வானத்தில்
கூதற் காற்று மெல்ல வீசும்!
இமை மூடித்திறக்கையில்
அடிவயிற்றில் குரலெடுத்து
ஒரு பறவை கத்திச் செல்லும்!
தனிமையின் துயரில்
அதுவும் பயணிக்கிறதோ?

கடந்து போன நினைவுகள்
நெஞ்சோரம்
விம்மிப் பொங்கி எழுந்து
புயலாய் அடிக்கும்!
பெருமூச்சாய் கரையொதுங்கும்
அலைகள் காலாறமுன்
உள்வாங்கிக் கொள்ளும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமற்ற தெருக்களில்
ஊமையாய் உதடுகள்
மௌனத்தில் உரையாடும்!

உலகமே ஒரு கீதம்தான்!
ஓ...
துயர கீதம்தான்!
அழகான சோகக்கீதம்தான்!
வாழ்க்கை ஒரு
சுகமான துயரம்
அதை நான் ஏற்கிறேன்!
ஏனெனில்
கொட்டித் தீர்ந்து போன
தூறல் மழை
நீ நடக்கும் பாதையில்
பூவாய்ச் சொரிகையில்
சொல்ல எடுத்து மறந்து போன
ஏதோ ஒன்றாய்
வாழ்வின் துயரென
வருந்தும் படியாய்
என் அடி மனதில்
ஒரு கேள்வி எழும்!
எங்கே?
என்ன செய்துகாண்டிருப்பாளோ
என் அவள்...?

○

*(20.07.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களத் தோழனுக்கு..!

"

சிங்களத் தோழனே!
நடைமுறை வாழ்க்கையை
ஏன் சிந்திக்க மறுக்கிறாய்?
இனம், மதம், மொழியென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் பிரிந்து கிடக்கிறாய்?
நீர், நிலம், காற்று
எல்லாம் ஒன்றுதானே எமக்கு!
பிறகு எதற்கு
இத்தனை பிரிவினைகள்?

வா தோழா
கை கோர்த்து நாட்டில்
சுதந்திரமாய் வலம்வருவோம்!
நமக்குள் வன்முறை எதற்கு?
இந்துவும், இஸ்லாமும்,
கிறிஸ்தவமும், பௌத்தமும்
அன்பைத்தானே நிறைக்கின்றன!
தர்மத்தைத்தானே சொல்கின்றன!

எதற்கு எம்மைச்
சிறுபான்மை என்கிறாய்?
அடிமைகள் என்று ஏன்
எம்மை ஒதுக்கிப் பார்க்கிறாய்?
சண்டைகள் வேண்டாம் தோழா
எனக்குள்ளும் உனக்குள்ளும்
சுவாசங்கள் ஒன்றுதான்..!
எனக்குள்ளும் உனக்குள்ளும்
உதிரமும் ஒன்றுதான்..!

○

*(21.07.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிம்மதி கிடைக்குமா..!

"

யுத்தத்தின் வடுக்களால்
எம் கவலைகள்
ஓயவில்லை!
கனவுகளும்
கண்ணீராய்க் கரைந்து
வாழ்க்கையே அஸ்தமனமானது!
வளமான வாழ்வும்
வறுமையாய்ப் போயிற்று!
இளமையும் தொலைந்து
அகதியாய்ப் போனது!

இறந்து போன சொந்தங்களை
கடற்கரைப் புதைகுழியில்
தேடுகிறோம்!
சுதந்திரக் காற்றே
வீசமுடியாத போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி அவர்கள்
உயிர்த்தெழுவர்?
ஜனநாயகம் பேசும்
மனிதர்களின் நடுவே
ஏன் சமாதானம் மட்டும்
தூரவே நின்றது?

சோகமெல்லாம் மறைந்து
நம்பிக்கையின் பூக்கள்
மகிழ்ச்சியாய் எப்போது மலரும்?
அமைதியைப் பெறுவதற்காய்
கனகாலம் காத்திருக்கிறோம்!
தொலைந்து போன சமத்துவம்
எப்போது
எம்முள் நடைபயிலும்?
இன்னொரு நரகத்தை
இனியும்
அனுபவிக்கக் கூடாதென்று
யாருமற்ற தேசங்களை நோக்கி
கால்நடையாய்ப்
போய்க்கொண்டிருக்கிறோம்!
நிம்மதி கிடைக்குமா?
என்றைக்கு..?
எப்போது..?

○

*(22.07.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைப்பொழுது..!

"

விடிந்தும் விடியாத
அதிகாலைப்பொழுது
சோர்வு முறித்துக்
கதவு திறந்தேன்!
மெல்லிய தென்றலால்
மேனி சிலிர்த்தது!
தானே தனக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை அமைத்துக்
கத்திப் பாடுகிறாள்
கடல் மகள்!

கதிர் வீசி ஒளி தந்து
உதிக்கிறான் சூரியன்!
பக்கத்து வீட்டு வேலியில்
துணையை அழைத்துக்
கூவுகின்றான் சேவல்!
பனியில் முகம் கழுவி
மலர்ச்சியில் சிரிக்கின்றன
பூக்கள்!
அந்தப் பூக்களில் மொய்த்துப்
பாடிப்பறக்கின்றன வண்டுகள்!

தூரத்துக் கோயில் மணியும்
ஏதேதோ சொல்கிறது!
சொந்த வானத்தில்
சுதந்திரமாய்ப் பறக்கின்றன
பறவைகள்!
இந்த இனிமைகளில்
எனை இழந்து காத்திருக்கிறேன்!
இப்பொழுதுகள்
நீளாதா என்று..?

o

*(23.07.2021)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அத்தியாயம்..!

"

நானும் நீயும்
புன்னகையில் யுத்தம்
செய்துகொண்டிருந்தோம்!
அப்போது
உன் பார்வையால்
மின்னல் ஒன்று
எழுந்து ஓயும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தின் மேகங்கள்
எம் சந்திப்புக்களில்
எமக்காய்
குடைபிடித்துக்கொண்டிருக்கும்!
உன் வார்த்தை
ஜாலத்தில்
என் நாடிநரம்பெல்லாம்
வாத்தியமாகும்!

வெட்கம் வெட்கம் என்று
மனசு சொன்னாலும்
உதடு எப்பவும்
உன் பெயரைத்தான்
உச்சரித்துக்கொண்டிருக்கும்!
இந்த இதயத்திற்கு
உன்னிடம் என்
காதலைச் சொல்லும்
தைரியம் இல்லை!

ஆனாலும்
நம் காதல்
புதிய அத்தியாயத்தைப்
பிரசவித்து நிற்கிறது!
எனக்குள் இருக்கும் நீயாய்..!
உனக்குள் இருக்கும் நானாய்..!

(25.07.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் விதை..!

"

என் பார்வையைத்
துளைத்தன உன் கண்கள்!
அதைக் காதலித்தது
என் நெஞ்சம்!
அந்தரத்தில் தொங்கும்
வெளவ்வாலாய் அங்குமிங்கும்
பறந்தது நினைவு!

யாருக்கும் தெரியாமலே
உன் நினைவுகளைச்
சுமக்கிறேன்!
வண்ணக் கோலங்களின்
வர்ணம் கலைந்ததுவோ?
எண்ணில்லாக் கற்பனைகள்
கட்டவிழ்க்க
வாழ்வைத் தொலைத்து
நிற்கிறேன்!

நீ போனபின்பும்
ஏனோ என் மனதிற்குள்
உயிர்ப்புடன் வந்து
போகிறாய்?
உணர்வில் நானும்
உயிரில் நீயும்
பிரிந்தது ஏனோ?
ஆனாலும் என் இதயத்தில்
நீ புரண்டெழுவதை
மனம் உணர்கிறது!
நாம் சந்திக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நேரப்பொழுதுகள்
நம் தழுவலின்றியே
தனிமையாய் நகர்கின்றன!

உன்னை முத்தமிடத்
துடிக்கும் உதடுகள்
வரண்ட வெடிப்புக்களால்
தம்மையே இழக்கின்றன!
உன் விரல்
கோர்க்கத் துடிக்கும்
என் கைகள்
நீயின்றித் தவிக்கின்றன!
என் மனமோ இங்கு
புரண்டு அழுகிறது!
தினம் நித்திரை
துறந்து துடிக்கின்றது!

உனக்கு நினைவிருக்கிறதா?
உன் தோளில் சாய்ந்து
கண் மூடிக் காதல்கதை
சொன்ன பொழுதுகள்!
என்னை நீ
பிரிந்து சென்றாய்!
உணர்வுகளில் வலி தந்தாய்!
சிந்திக்க மறந்து உன்
நிழலையும் தேட வைத்தாய்!
நெஞ்சப் பெட்டகத்துள்
நீ இன்றும்
அதே பொலிவுடன்
என்னோடுதான் இருக்கிறாய்!

தலைகோதி பிடரி தடவி
இமை மூடி இதழ்விரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பேசும் வார்த்தைகள்
இரகசியமாய்
என்னுள்ளே கேட்கின்றன!
படிப்பம் படிப்பம் என்று
புத்தகத்தைத் திறந்தாலும்
உனது முகம்தான்
பிம்பமாய்த் தெரிகின்றது!
ஓ!
என் மனமே உன்னில்
மண்டியிடுவது புரிந்தது!

போனால் போகிறது
நான் உன்மீது
கொண்ட காதலைப் புதைத்து
மீளவும் புதிதாய்ப்
பிறந்துவிடப் பார்க்கிறேன்!
முடியவில்லை!
உன் காதல்
நாளை வரும் என்ற
நம்பிக்கையில்
என் கண்களைக்
கடிதப் பெட்டியில் வைத்துக்
காத்திருக்கிறேன்!
மீண்டும் நம்
காதல் விதை
முளை விடுமோ?
தளிர் விடுமோ?
கிளை பரப்புமோ என்று...!

○

(25.07.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை..!

இலக்கிய வடிவங்களுள் மிகவும் பழைமையானது கவிதையாகும். கவிதை என்பது ஒரு மொழியின் செம்மையான வடிவம், கலைமயமாக்கப்படும் வாழ்க்கையாகும். கவிதைக்கு உணர்வு அடிக்கல். கற்பனை படிக்கல். கருத்து உள்ளிடம். ஓசையும் அணியும் ஒப்பனை என்றவாறு இலக்கிய அறிஞர் குறிப்பிடுவர். கவிதை என்னும் மாளிகை சொல்லினாலும், பாடுபொருளினாலும், ஒழுங்கமைந்த உத்திச் சிறப்பினாலும் கட்டப்படுவது. ஒரு மொழியானது வளர்ச்சியின் அதியுச்சத்தையும், சொற்களின் பயன்படு முதிர்ச்சியையும், வெளிப்படுத்தலின் நுட்பத்தையும் அடைவது கவிதையிலேதான்.

தான் வாழும் சமூகச் சூழலின் தாக்கத்திற்காளான ஒரு கவிஞன், தன்னை ஈர்த்துக்கொண்ட சமூகம், இயற்கை, பிரச்சினை பற்றியும், அகரீதியான தனது உணர்வுகள் பற்றியும், செறிவும், இசைப்போக்கும் அணிநலனும் நிறைந்த மொழிநடையில் எழுதும் எழுத்துக்கள் கவிதையாக மலர்கிறது. சமூகத்தில் அவனது இருப்பு, இன்பதுன்பங்களின் உணர்வுநிலை, சமூக அக்கறை ஆகியவற்றைத் தெரிவிக்கத் தேர்ந்தெடுத்துக்கொண்ட கருவியே கவிதையாகும். இது அவனால் உள்ளபடிக்கு உருவாக்கப்பட்ட உள்ளத்துணர்வின் படைப்பாகும். 'கருவிலே திருவுடையவன் கவிஞன்' என்றும், 'கவிஞன் சூழலின் அனுபவத்தினால் உருவாகிறான்' என்றும் வேறுபட்ட கருத்துக்கள் உருவாயினும், "உள்ளத்து உள்ளது கவிதை" என்ற கவிமணியின் வாக்கும், "நமக்குத் தொழில் கவிதை" என்ற மகாகவி பாரதியின் கருத்தும், "அது ஒரு தொழில் உற்பத்தி" என்னும் மேலைத்தேய முற்போக்கு அறிஞர்களின் எண்ணமும் குறிப்பிடத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய இலக்கிய வடிவங்கள் வேலைக்காரருடன் உரையாடுவதைப்போல அமைகையில், கவிதையானது இளவரசியுடன் உரையாடுவது போன்ற மயக்கந்தரவல்லது என்றார் ஓர் அறிஞர். இன்று மரபுக் கவிதையின் இலக்கண வரம்புகளுக்குக் கட்டுப்படாது புதுக்கவிதை முயற்சிகள் வரவேற்புப்பெற்று வருகின்றன. மரபோ, புதுமையோ எதுவாயினும் உள்ளடக்கத்தினால்தான் சமுதாயப்பயன் எய்த முடியும் என்ற நிலை தற்காலக் கவிதைகளில் காணப்படுகின்றது. சொற்சிக்கனம், பேச்சுப்பாங்கு, உத்தி, குறியீடு, படிமம், வடிவமிழப்பு ஆகிய பண்புகள் கொண்டு புதுக்கவிதை மலர்ந்துள்ளது. இலக்கண மரபுகளை மீறியதாகவும், உணர்ச்சிக்கும் கருப்பொருளுக்கும் உயிர் கொடுப்பதாகவும் புதுக்கவிதை அமைந்துள்ளது. இதனால் மரபறியாத நூற்றுக்கணக்கானோர் கவிதையுலகில் பிரவேசித்து வெற்றியும், தோல்வியும் கண்டுள்ளனர்.

வளர்ந்து வரும் இளங்கவிஞர் முருகையா சதீஸ் என்பவர் தனது முதற்கவிதைத் தொகுதியான ஆறிப்போன காயங்களின் வலிகளினை 'கவிஞர் முல்லை' என்ற புனைபெயரில் வெளியிட முன்வந்துள்ளமை வரவேற்புக்குரிய முயற்சியாகும். இவர் தான் கண்டு, கேட்டு அனுபவித்த தரிசனங்களை – நிஜங்களை, அருட்டுணர்வுகளை 48 சிறியதும், பெரியதுமான புதுக்கவிதைகளாக இதில் படைத்தளித்துள்ளார். இளவயது இளைஞன் மனதில் ஏற்பட்ட இனிப்பான, கசப்பான அனுபவங்கள் எளிய சொல்லோவியங்களாகவும், உணர்வின் வெளிப்பாடுகளாகவும் விளங்குகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் சிறப்பு நெறியைப் பயின்று நிறைவுசெய்த இவர், அவ்வப்போது பல்கலைத் தமிழ்சார் மன்றத்திலும், ஏனைய இலக்கிய அமைப்புக்களிலும் பாடிய கவிதைகளும் இவற்றுள் அடங்கும். ஏடுகளில் வந்த சிலவும் உள. இளவயதுக்குரியதாய் எழுச்சியூட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல், இனிய கிராமத்து நினைவுகள், தாயின் மீதான பக்தி, கல்வி தந்த ஆசான்கள், பல்கலைக்கழக வாழ்வின் இனிமைகள், தாய் மண்ணின் நினைவுகள், அவற்றை இழந்துவிட்ட வலிகள், அவற்றைப்பற்றிய மீள்திரும்பும் நினைவுகள், யுத்தகாலக் கெடுபிடிகள், எழிலான இயற்கை வளம், ஏழ்மை, சமகாலக் கொரோனா, முதுமையின் தவிப்பு, சுனாமி அவலம், உறவுகள், நட்பு, கிட்டாத சுதந்திரக்காற்று, தாலாட்டு, சுதந்திர தாகம், மலையகத்தோர் வாழ்வு, சிங்களத் தோழனுக்கு, புதிய திருப்பம் முதலான பல பாடுபொருள்களைத் தழுவிய கவிதைகள் முல்லைக்கவியின் நூலில் இடம்பிடித்துள்ளன. இவையாவும் *2012 – 2021* ஆண்டுகள் காலப்பகுதிக்குரியவை. கவிதைகளை நோக்கும் போது தமிழ்மொழியாளுமை வளர்ச்சியையும், கவிதை பற்றிய புரிதலையும் படிப்படியாகக் கவிஞரிடையே கண்டுகொள்ள முடிந்துள்ளது. தனது மனதைக் கலவரப்படுத்திய, தாக்கமுறச் செய்த சம்பவங்களை ஏக்கத்துடனும், தாக்கத்துடனும், வீறாப்புடனும் எழுத்தில் வடித்திடத் துடிக்கும் ஆர்வம் இவற்றினூடே பட்டுத் தெறிக்கிறது.

"தலை கோதிப் பிடரி தடவி
இமை மூடி இதழ் விரித்து
நீ பேசும் வார்த்தைகள்
இரகசியமாய்
என்னுள்ளே கேட்கின்றன.
படிப்பம் படிப்பம் என்று
புத்தகத்தைத் திறந்தாலும்
உனது முகம்தான்
பிம்பமாய்த் தெரிகிறது.
ஓ!
என் மனமே உன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டியிடுவது புரிந்தது." ('காதல்விதை' கவிதையிலிருந்து)

"வெட்கம் வெட்கம் என்று
மனசு சொன்னாலும்
உதடு எப்பவும்
உன் பெயரைத்தான்

உச்சரித்துக் கொண்டிருக்கும்." ('புதிய அத்தியாயம்' கவிதையிலிருந்து)

"வெட்கிச் சிவந்த
அந்தி வானத்தில்
கூதற்காற்று மெல்லவீசும்
இமை மூடித்திறக்கையில்
அடிவயிற்றில் குரலெடுத்து
ஒரு பறவை கத்திச் செல்லும்.
தனிமையின் துயரில்

அதுவும் பயணிக்கிறதோ?" ('என் அவள்' கவிதையிலிருந்து)

கவிஞர் முல்லையின் காதல் கவிதைகளின் பரிமாணங்களுக்கு இவை சில சான்றுகள். உணர்வு, மொழியழகு, எளிமை, யதார்த்தம் ஆகியவை கலந்து இளங்காதலானாலும் காதல் கொண்டோர் அனைவரது எண்ணங்களுக்கும் பொதுவானவையாக விளங்குகின்றன. புதுக்கவிஞராயினும் அவருக்குப் புதுக்கவிதை வாலாயமாய் வந்துள்ளது.

"அந்தி வானத்து
மாலைப் பொழுதுகள்.
ஊர்கூடி மகிழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலமரத்து நிழல்.
விறகுச் சுமையுடன்
அன்ன நடைபோடும்

பெண்கள்." ('நினைவுகள்' கவிதையிலிருந்து) கடந்தகால ஊர் பற்றிய நினைவுகளை இசைமீட்டிக் கழிவிரக்கம் கொள்ள வைக்கிறது.

"வானிலே பறக்கும்
நூலறுந்த பட்டங்களாய்ச்
சுற்றித்திரிந்த அந்தப்
பள்ளியின் நாட்கள் - இப்போ
ஆறிப்போன காயங்களாய்

வலிக்கின்றன." ('ஆறிப்போன காயங்களின் வலிகள்' கவிதையிலிருந்து)

அடிபட்ட மனதில் ஆழப்பதிந்துள்ள வடுக்கள் எப்போதும் கடந்துவிட்ட காலத்தை நினைவூட்டுவன. இங்கே ஆறிப்போன இளமைப் பருவத்துப் பள்ளி வாழ்க்கைகூடக் கவிஞருக்கு வலிகளைத் தருவதைப் பார்க்கிறோம். இது போன்றதே தாய் மண்ணின் பிரிவு, இடப்பெயர்வுத் துயரங்கள், தமிழரின் தொன்மைகள் கபளீகரஞ் செய்யப்படல், மீண்டும் பிறந்த மண்ணிற்குத் திரும்பும் போது கண்ட துன்பகரமான காட்சிகள் என்றவாறு கவிஞரின் உள்ளம் இழந்துவிட்டவைகளுக்காக ஏங்கி ஏங்கித் துடிப்பதைப் பல கவிதைகள் துயரோடும் உணர்ச்சியோடும் நம்மிடையே இனம்புரியாத அவலத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்திவிடுகின்றன. கவிஞரது சமூகப் பிரக்ஞைக்கு எடுத்துக்காட்டாக "வரட்சி" எனும் கவிதை விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காடழிப்பின் உக்கிரத்தால்
வான் மழையும் சிந்தவில்லை.
மண்ணை நம்பி வாழ்ந்தவர்கள்
பட்ட கஷ்டம் கொஞ்சமில்லை!
ஏர் உழுத நிலங்களிலும்
ஏரிகளைக் காணவில்லை!
மாடு மேய்த்த பூமியிலும்
குளங்களையும் காணவில்லை!
ஆற்று மணல் எல்லாம்

அகழ்ந்து விலை போயிடிச்சாம்!" சமகால யதார்த்த நிலை இதுதான். தமிழர் பிரதேசங்களின் வேதனை கலந்த விரக்திதான் கவிதையைப் படிக்கையில் நமக்கு ஏற்படுகிறது. வட்டுவாகல் பாலம், குருந்தூர் மலை, மலையக வாழ்வு முதலான தலைப்புக் கவிதைகளும் சமூகப் பிரச்சினைகளில் மையங்கொண்டு அரசியல் பேசியுள்ளன. முல்லை அவர்களின் தாயகப்பற்றும், தாயக விடுதலைக்கான ஏக்கமும் அவரது "நாளை?" என்ற கவிதையில் ஊடாடுகிறது. சொல்லாத சேதிகளைச் சொல்வது போலிருக்கிறது.

"மண்மீது நேசம்கொண்டவர்களே
இன்றே தூங்கி விடுங்கள்.
இல்லையேல் - நாளை
எண்ணற்ற தகமைகளோடு
கல்லறை சேர முடியாமல்
காற்றாகிப் போகலாம்.
நாளை விடியலைக்காண
இருக்க மாட்டோம் என்பதையா
இவை அடையாளப்படுத்துகின்றன?"

ஈழத்தமிழர் அனைவரது நெஞ்சங்களிலும் கனன்று எழும் நெருப்பின் சுவாலையாக இக்கவிதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபொருள் அமைந்துள்ளது. பாதை தெரியாத எமது பயணங்கள் காட்டிய படுகுழித்துயரம் நாம் அறிந்ததே. அதன் அழிவில் நாம் கண்ட பயங்கரம் எமது இனிய பழைமையான வாழ்வையும், எதிர்கால நம்பிக்கையையும் வெகுதூரம் தொலைத்து விட்டதும் உண்மையே. வெறும் வயிற்றுக்கு மட்டும் சொந்தமாகிப்போன மக்களாக வாழ்வதில் அர்த்தமில்லை. மானமும், உணர்வும், உரிமையும் மறந்து, பண்பாட்டை இழந்த மண்ணுக்கு விடுதலை எட்டாக்கனி என்பதை இளங்கவிஞர் முல்லை ஆணித்தரமாக வலியுறுத்தி நிற்கிறார். இவரது கவிதைகள் இயற்கை தொடர்பாகவும் இனிமை தருகின்றன. உறவுநிலையிலும் பெருமை சேர்த்துள்ளன. ஏதோ உன்னதத்தின் உச்சியைக் காட்டுவன என்று கூறவில்லை. உணர்வு கலந்து படையல்களை உண்மை வெளிச்சமாக - நிஜதரிசனங்களாகத் தந்துள்ளார். அவரது கவியாளுமை மேன்மேலும் வளரவேண்டும். குறைகள் சில இருப்பினும் அடுத்து வரும் நூல்கள் அவற்றை விலக்கிப் பொருளிலும், கலைத்துவத்திலும் நல்ல நல்ல கவிதைகள் கொண்டு பிரகாசிக்க வேண்டும் என விரும்புகிறேன். காலம் அனுபவங்களினூடு கவிஞனைப் புடம் போடும். அதுபோல் கவிஞர் முருகையா சதீஸ் அவர்களும் எதிர்காலத்தில் ஈழத்தமிழர் இலக்கிய உலகில் தனக்கோர் இடத்தைப் பெறுவார் என நம்புவோமாக.

கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு,
இல.*15*, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
***10.08.2021.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-624-5786-07-7

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org